GOKULAM


கோகுலம்

டிசம்பர் 2004

ரூ.6/-




படத்தை நிறைவு செய்யுங்கள்!





கிறிஸ்துமஸ் தாத்தா வண்டியை அடைய வழிகாட்டுங்கள்



கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

முதன்மை உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622 / 23 / 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com


சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்








டிசம்பர் 2004 மலர் : 22 இதழ் :


கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதி

நம்பிக்கை தந்த கிறிஸ்துமஸ் பரிசு!

கதை, படம்:
ராம்கி







அடுத்த நாளும் பணக்காரர் ஒரு தங்கக் கட்டியை வைத்தார்.
இன்றைக்கும் ஒரு தங்கக் கட்டி! எப்படி?
மூன்றாம் நாள் பணக்காரர் தங்கக் கட்டியைப் போடும் போது-
எங்களைக் காப்பாற்றியது தாங்கள்தானா! தங்களை வணங்குகிறேன்.
என்னை வணங்காதீர்கள். கடவுள் நம்பிக்கை உங்களைக் காப்பாற்றியது.
ஏழைகளுக்கு உதவிய அந்தப் பணக்காரர்தான் புனித நிக்கோலஸ். இவர்தான் பிற்காலத்தில் சாண்டா கிளாஸ் என்ற கிறிஸ்துமஸ் தாத்தா.

ஒளி விருந்து!



☆ சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பு, கிறிஸ்துமஸ் பண்டிகையை மக்கள் கொண்டாடிய மாதமும் தேதியும் நாட்டுக்கு நாடு வேறுபட்டு இருந்தது. டிசம்பர் 6, மார்ச் 25, ஏப்ரல் 20, மே 20 என்று தங்கள் இஷ்டத்துக்கு கொண்டாடினார்கள். முதலாம் ஜூலியஸ் என்ற போப் ஆண்டவருக்கு இது பிடிக்கவில்லை. கிறிஸ்துமஸ் பல தேதிகளில் கொண்டாடப்படுவதை நிறுத்தி உலகம் முழுவதும் ஒரே தினத்தில் கொண்டாடப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார். டிசம்பர் 25-ந் தேதி கிறிஸ்துமஸ் கொண்டாடுங்கள் என்று அவர் பிரசாரம் செய்தார். கி.பி 351ல் இந்தப் பிரசாரம் நடந்தது. இதைத் தொடர்ந்து தான் டிசம்பர் 25ந் தேதி கிறிஸ்துமஸ் கொண்டாடும் வழக்கம் பெரும்பாலான நாடுகளில் ஏற்பட்டது.

☆ இயேசு பிறந்த தின விழா முதலில் 'ஒளி விருந்து' என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்தது. அமெரிக்காவைச் சேர்ந்த டே என்ற பெண்தான் இயேசு பிறந்த புனித நாளைக்கு 'கிறிஸ்துமஸ்' என்று பெயர் சூட்டினார்.

☆ கிறிஸ்துமஸ் என்பதை சுருக்கமாக X மாஸ் என்பார்கள். கிரேக்க மொழியின் முதல் எழுத்து X கிறிஸ்து என்பதை 'Xristos' என்று எழுதினார்கள். நாளடைவில் இது X மாஸ்' என்றாகிவிட்டது. அதற்கு Christ's mass என்று பொருளாகும்.

☆ 1862 ஆம் ஆண்டில் தாம்சன் என்ற ஓவியர் தான் வரைந்த ஓவியத்துடன் கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டையை இங்கிலாந்து அரசருக்கு அனுப்பினார். அதைக் கண்டு வியந்த அரசன் அந்த ஓவியரைக் கொண்டு பல ஓவியங்களை வரைந்து கிறிஸ்துமஸ் வாழ்த்தாகப் பல அரசர்களுக்கும் அனுப்பினார். அதிலிருந்துதான் கிறிஸ்துமஸ் வாழ்த்து அனுப்பும் வழக்கம் வந்தது.

☆ அமெரிக்காவில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின்போது கிறிஸ்துமஸ் மரங்களை போட்டி போட்டு வைப்பார்கள். அந்த மரங்களின் அலங்காரம் சிறப்பாக இருக்கும். கிறிஸ்துமஸ் மரங்களில் பரிசுப் பொருட்களை தொங்க விடுவதற்காக



கிறிஸ்துமஸ் தாத்தா ரகசியமாக குதிரையில் வருவார் என்று அமெரிக்கர்கள் நம்புகின்றனர். எனவே

என்.ஜரினா பானு



கிறிஸ்துமஸ் சீசனில் தங்கள் வீட்டு வாசல்படியில், மரப்பெட்டியில் குதிரை சாப்பிடும் காய்ந்த புல் வைப்பதை அவர்கள் வழக்கத்தில் வைத்துள்ளனர்.

☆ இத்தாலி நாட்டில் கிறிஸ்துமஸ் தினத்தன்று குடும்பத்தில் உள்ள அனைவரும் ஓர் இடத்தில் ஒன்று சேருவார்கள். அவர்கள் மத்தியில் ஒரு பெரிய கூடை வைக்கப்படும். கூடையில் நிறைய பொட்டலங்கள் இருக்கும். ரெடி...ஒன்...டூ...த்ரீ.. ஜூட் என்றதும் பாய்ந்து சென்று ஆளுக்கு ஒரு பொட்டலத்தை எடுப்பார்கள். ஒவ்வொரு பொட்டலத்திலும் ஏதாவது ஒரு பரிசுப் பொருள் இருக்கும். அந்தப் பரிசுப் பொருளுக்கு ஏற்ப அந்த ஆண்டு முழுவதும் பலன்கள் கிடைக்கும் என்று இத்தாலி நாட்டவர் நம்புகிறார்கள்.



☆ ஃபிரான்ஸ் நாட்டில் கிறிஸ்துமஸ் தினத்தன்று குடும்பத் தலைவர் ஒரு விளக்கை ஏற்றி அதை அணைத்து விடுவார். அந்த விளக்கை மறுபடியும் வீட்டின் மூத்த மகன் ஏற்றி வைப்பார். அந்த விளக்கு ஜனவரி மாதம் 6-ந் தேதி வரை அணைந்துவிடாதபடி பாதுகாக்கப்படும். இயேசுவின் பிறப்பைக் குறிக்க இந்த விழாவை ஃபிரான்ஸில் எல்லா வீடுகளிலும் கொண்டாடுகின்றனர்.





☆ இப்போது பத்திரிகைகளில் கிறிஸ்துமஸ் மலர்கள் வெளியிடப்படுகின்றன. முதன்முதல் கிறிஸ்துமஸ் மலர் வெளியிட்ட பத்திரிகை 'இல்லஸ்டிரேட்டட் லண்டன் நியூஸ்' என்ற பத்திரிகைதான். அது முதன்முதலாக 1848-ம் ஆண்டு கிறிஸ்துமஸ் சிறப்பு மலரை வெளியிட்டது.

சீனாவில் குறைந்து வரும் மக்கள் தொகை!

செய்தி நேரம்



• சுர்ஜித் சிங் பர்னாலா

மீண்டும் வெற்றி!

அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் மீண்டும் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார். 58 வயதான புஷ் மேலும் 4 ஆண்டுகளுக்கு அமெரிக்க அதிபராக இருப்பார். இத் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளரான ஜார்ஜ் புஷ் ஷுக்கும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜான் கெர்ரிக்கும் இடையே மிகக் கடுமையான போட்டி நிலவியது. 538 தேர்தல் சபைவாக்குகள் உள்ளன. இதில் 270 வாக்குகளைப் பெற்றால்தான் ஒருவர் அதிபராக முடியும். 274 தேர்தல் சபை வாக்குகளைப் பெற்று புஷ் மீண்டும் அதிபராகி இருக்கிறார்.


புதிய ஆளுநர்

தமிழகத்தின் புதிய ஆளுநராக சுர்ஜித் சிங் பர்னாலா பதவி ஏற்றிருக்கிறார். ஆளுநர் ராம மோகன் ராவ் பதவி விலகினார். ஆந்திர ஆளுநராக இருந்த பர்னாலா இரண்டாவது முறையாக 13 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தமிழக ஆளுநராகப் பொறுப் பேற்றிருக்கிறார்.


மக்கள் தொகை

குவைத் நாட்டின் மொத்த மக்கள் தொகை 9.5 லட்சம் மட்டுமே. ஆனால் அங்கு வேலை பார்க்கும் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் 17 லட்சம் பேர் இருக்கிறார்கள்.

• ஜார்ஜ் புஷ்



• ஜான் கெர்ரி



வேலை வாய்ப்பு


தமிழகத்தில் அரசு வேலைக்காக வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்போரின் எண்ணிக்கை 54 லட்சத்தைத் தாண்டிவிட்டது. இவர்களில் 11,700 பேர் எம்.பி.பி.எஸ் பட்டதாரிகள், 71,000 பேர் பி.இ பட்டதாரிகள், 12,000 பேர் எம்.இ பட்டதாரிகள். கடந்த 3 ஆண்டுகளாக அரசுப் பணிகளுக்கான சேர்க்கைக்கு தடை ஆணை இருந்து வருகிறது. இந் நிலையில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

குறைந்து வரும் மக்கள் தொகை!

சீனாவில் ஒரு தம்பதிக்கு ஒரு குழந்தை என்ற கட்டுப்பாடு காரணமாக 30 கோடி குழந்தைகள் பிறப்பது தடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஆண்டுக்கு 9% பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கு இது பெரிதும் உதவியுள்ளது. சீனாவின் தற்போதைய மக்கள் தொகை 130 கோடி.

ஜோக்ஸ்
கார்னர்

பல் இல்லாத ஆள் வேண்டும்!



"அவர்தான் எனக்கு மெக்கானிஸம் சொல்லிக் கொடுத்தவர்."

"ஸ்குரு நாதர்ன்னு சொல்லு!"

- சாரதி

"அரிசி எங்கிருந்து கிடைக்குது?"

"ரேசன் கடையிலிருந்து கெடைக்குது சார்!"

- வீ. கலாதேவி,
இடைப்பாடி



"முறுக்குக் கடைக்கு ஆள் வேணும்னு சொன்னியே. எந்த மாதிரியான ஆள் வேணும்?"

"பல் இல்லாம இருந்தால் போதும்!"


- பா. விஜயசாரதி,
திருப்பதி



"ராமு, நேத்து 'நாய்' பற்றி கட்டுரை எழுதி வரச் சொன்னேன்! ராஜா எழுதியது போலவே உன்னுடையதும் இருக்கிறதே. அவனைப் பார்த்து காப்பி அடித்தாயா?"

"ஐயோ! இல்லை! நான் எழுதியதும் அதே நாய் பற்றிதான் சார்!"

- பு. யூனுஸ் சாரிக்,
கோமதிபுரம்



கிறிஸ்துமஸ்

தபால்காரர் கொண்டு வந்து கொடுத்த தபால்களை ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டிருந்தான் டேவிட். ராபர்ட் கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டை அனுப்பியிருந்தான். மற்ற வாழ்த்து அட்டைகளையும் ஆர்வத்துடன் பிரித்தான். ''அம்மா, இங்கே பாருங்க. எவ்வளவு மலிவான வாழ்த்து அட்டைகளை அனுப்பி இருக்கிறாங்க. சே!'' என்று அலுத்துக் கொண்டே டேவிட் அம்மாவிடம் வாழ்த்து அட்டைகளைக் கொடுத்து விட்டுச் சென்றான்.

டேவிட்டின் நண்பர்கள் ராபர்ட், ஆன்ட்ரூ மற்றும் கெவின் ஆகியோர் கைகளால் செய்யப்பட்ட வாழ்த்து அட்டைகளை அனுப்பி இருந்தனர். ''ரொம்ப அழகாக இருக்கிறது! உன் மேல் எவ்வளவு அன்பு இருந்தால் இவ்வளவு சிரத்தை எடுத்து அழகாக வரைந்து அனுப்பி இருப்பார்கள்!'' என்றார் அம்மா.

ஆனால் டேவிட்டுக்கு எரிச்சலாக இருந்தது. ''இந்த வாழ்த்து அட்டைகள் எல்லாம் ரெண்டு ரூபாய்தான் பெறும். நான் எவ்வளவு செலவு செய்து அழகான வாழ்த்து அட்டைகளை அனுப்பி




அற்புதம்!

அஞ்சு ஷரன்

இருக்கேன்!" என்றான் டேவிட்.

"டேவிட், வாழ்த்து என்பது அன்பை பிரதிபலிக்கணும். உன்னை மாதிரி தற்பெருமை பேசக்கூடாது" என்றார் அம்மா.



ஞாயிற்றுக்கிழமை டேவிட் சர்ச்சுக்குச் சென்றான். சர்ச் வாசலில் டேவிட்டின் மூன்று நண்பர்கள் கையில் வாழ்த்து அட்டைகளுடன் நின்று கொண்டிருந்தனர்.

"ஹாய் டேவிட்!"- கெவின் சந்தோஷமாகக் கூப்பிட்டான்.

"டேவிட், இந்த வாழ்த்து அட்டைகள் எல்லாம் எவ்வளவு அழகாக இருக்குதுன்னு பாரு! இதை புனித ஜோசப் காப்பகக் குழந்தைகள்தான் செய்திருக்கிறார்கள். யாருமே ஆர்வமாக வாங்க மாட்டேங்கிறாங்கடா" என்றான் ஆன்ட்ரூ வருத்தத்துடன்.

"வாங்கடா, இருக்கிற பணத்தை ஜோசப் காப்பகத்தில் கொடுத்துட்டு வரலாம்" என்றான் ராபர்ட்.

டேவிட்டுக்கு ஆச்சர்யமாக இருந்தது. "யாருமே ஒரு கார்டு கூட வாங்கலையா?"

"ஆமாம் டேவிட்.

எங்களுக்குத் தேவையான அளவுக்குப் பணம் கொடுத்து வாங்கினோம்'' - ராபர்ட்.

டேவிட்டுக்கு வெட்கமாக இருந்தது. தன் நண்பர்களை எவ்வளவு மோசமாக எடை போட்டு விட்டான்!

''எனக்குப் பத்து கார்டு கொடுங்கடா'' என்றான் டேவிட்.

நண்பர்கள் நன்றி சொன்னார்கள்.

டேவிட் நண்பர்களுடன் காப்பகத் துக்குச் சென்றான். சிஸ்டர் ஆனி புன்னகையுடன் வரவேற்று, வாழ்த் தினார். பணத்தைப் பெற்றுக் கொண்டு, ஒவ்வொருவருக்கும் ஒரு சாக்லேட் பாக்கெட்டை வழங்கினார். அனைவரும் வாங்க மறுத்தனர். சிஸ்டர் கட்டாயப் படுத்திக் கொடுத்தார்.

நால்வரும் கிளம்பிச் சென்றனர். அதன் பிறகு சிஸ்டர் மாதா ''இந்தக் கட் டடத்தைப் புதுப்பிக்க நிறையப் பணம் தேவைப்படுகிறது. என்ன செய்யப் போறோம்?'' என்றார் கவலையுடன்.

''இது கிறிஸ்துமஸ் நேரம். ஏதாவது அற்புதம் நிகழ்ந்து நம் கஷ்டம் தீரும். கவலைப் பட வேண்டாம்'' என்று ஆனி நம்பிக்கையூட்டினார்.

''இந்தக் காப்பகத்துக்கு ரொம்பப் பெரிய அளவில் நாம் உதவி செய் தாகணும்'' - ஆன்ட்ரூ.



இங்கிலாந்து நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்துமஸ் சமயத்தில் விசேஷ தபால் தலைகள் வெளியிடுவார்கள். கிறிஸ் துமஸ் தாத்தா பல்வேறு செயல்களில் ஈடு பட்டு இருப்பதுபோல அந்தக் தபால் தலை கள் இருக்கும்.

- என். ஜரினாபானு, திருப்பட்டினம்

''வாங்கடா, கேஸிடி பேக்கரி ஷாப்க்குப் போவோம்'' என்றான் டேவிட் கையிலிருந்த சாக்லேட்டைப் பார்த்தபடி.

பேக்கரி கடைக்குள் அனைவரும் நுழைந்தனர். டேவிட் தயங்கியபடி ''சார், இந்த சாக்லேட்களைச் சாப்பிட்டுப் பாருங்கள்'' என்றான்.

கடையின் மானேஜர் சாப்பிட்டுவிட்டு ''பரவாயில்லை, நன்றாகத்தான் இருக் கிறது'' என்றார்.

டேவிட் சந்தோஷமடைந்தான். உடனே, ''சார், இந்த சாக்லேட்டுகளுக்கு ஆர்டர் தந்தால் உதவியாக இருக்கும்'' என்றான்.

''இது கிறிஸ்துமஸ் சீஸன். எல் லோரும் கேக்தான் வாங்குவார்கள். அத னால் சாக்லேட் ஆர்டர் கொடுக்க முடியாது'' - மானேஜர்.

நண்பர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்:

மறுநாள் டேவிட்க்கு சாக்லேட் நினைவு வந்தது. ஃபிரிட்ஜைத் திறந்து எடுத்தான். சாக்லேட் மிகவும் கடினமாகி, இறுகி இருந்தது. உடனே டேவிட் சாக் லேட்டை ஒரு வாணலியில் போட்டு சூடு படுத்தினான். சாக்லேட் உருகியது.

டேவிட் வேகமாக கேஸிடி பேக் கரிக்குச் சென்றான். விஷயத்தை விளக் கினான். ''நீ சொல்றது எந்த அளவுக்குச் சரியாக இருக்கும் என்று தெரியவில்லை. நானே பிறகு தொடர்பு கொள்கிறேன்'' என்றார் மானேஜர்.

அன்று மாலை டேவிட்க்கு கேஸிடி மானேஜர் போன் செய்தார். ''டேவிட், உன் யோசனைப்படி கேக் மீது சாக்லேட் பேஸ்டைப் பூசினோம். சுவை மிகவும் நன்றாக இருக்கிறது. சிஸ்டர் ஆனியிடம் சாக்லேட் செய்முறையை வாங்கிக் கொடுக்க முடியுமா?'' என்றார்.

''சாரி சார். நீங்கள் வேண்டுமானால் ஆர்டர் கொடுங்கள். உங்க பேக்கரியில் மட்டும்தான் இந்த சாக்லேட் கேக் கிடைக்கும்; லாபமும் அதிகமாகும்.

என்ன சொல்றீங்க சார்?'' - டேவிட்.

மானேஜர் ஒப்புக் கொண்டார்.

டேவிட் சிஸ்டர் ஆனிக்கு விஷயத்தைச் சொன்னான். உடனே அங்குள்ள குழந்தைகளும் சிஸ்டர்களும் சாக்லேட் பேஸ்ட் தயாரிக்க ஆரம்பித்தனர்.

''சிஸ்டர், இந்த முறை சாக்லேட் இன்னும் அதிகச் சுவையாக வந்திருக்கிறது. இதன் செய்முறையை யாரிடமும் சொல்லி விடாதீர்கள்'' என்றான் டேவிட்.

சாக்லேட் கேக்கின் புகழ் வேகமாகப் பரவியது. எல்லோரும் கேஸிடி பேக்கரியை நோக்கி வந்தார்கள். விற்பனை யாரும் எதிர்பார்க்காத அளவுக்கு எட்டியது; பெரும் லாபம் கிடைத்தது.

கேஸிடி மானேஜர் சிஸ்டர் ஆனியை அழைத்து பெரிய தொகைக்கு செக் கொடுத்தார். சிஸ்டர் ஆனி செக்கில் குறிப்பிட்டுள்ள தொகையைப் பார்த்தார். கட்டடத்தைப் புதுப்பிக்கும் அளவுக்கான தொகை அதில் இருந்தது. 'கடவுள் அற்புதம் நிகழ்த்தி விட்டார்' என்று கைகூப்பி நன்றி கூறினார் ஆனி.

மறுவாரம் டேவிட் காப்பகத்துக்கு வந்தான். சிஸ்டர் ஆனி மகிழ்ச்சியுடன் வரவேற்றார். குழந்தைகள் தாங்களே ஒரு வாரமாக டிஸைன் செய்த பெரிய வாழ்த்து அட்டையைக் கொண்டு வந்து டேவிட்டிடம் கொடுத்தனர். வாழ்த்து அட்டை மிகமிக அழகாக டேவிட்டுக்குத் தெரிந்தது.

கிறிஸ்துமஸ் அன்று மும்பையிலிருந்து டேவிட்டின் மாமா போன் செய்தார். ''டேவிட், நீ அனுப்பின வாழ்த்து அட்டை ரொம்பப் பிரமாதம்! யாரு இதைச் செய்தது? இதைச் செய்தவர்களை வைத்து என்னுடைய கம்பெனிக்கு காலண்டர் தயாரிக்க முடிவு செய்திருக்கேன். அதற்கு உண்டான பணமும் கொடுத்துடறேன்'' என்றார்.

டேவிட்டுக்கு மகிழ்ச்சி! உடனே இந்தச் செய்தியைக் கூற சிஸ்டர் ஆனியை நோக்கி ஓடினான்.

அட்டையில்: **ஸ்வேதா**

வண்ணப்படம்: **ஸ்ரீ ஹரி**



நண்பர்களே, உங்களுக்கு எல்லாம் என்னை நன்றாகத் தெரியும். இந்தியாவின் தேசிய விலங்கு என்ற உயர்ந்த அந்தஸ்து கொடுத்திருப்பதில் எங்களுக்கு ரொம்ப மகிழ்ச்சி.

ஆனால் புலிகளாகிய எங்கள் இனங்கள் மட்டுமின்றி, காட்டு விலங்குகள் அனைத்துமே இன்று எண்ணிக்கையில் குறைந்து அழிந்து வரக்கூடிய ஆபத்தான நிலையில் தான் உள்ளன.

விலங்குகள், பறவைகள் பூச்சிகள், கடல் வாழ் உயிரினங்கள், தாவரங்கள் போன்று மனிதனும் இவ்வுலகில் வசிக்கும் ஓர் உயிரினம்தான். அறிவில் சிறந்த மனிதன் தங்களைத் தவிர பிற உயிர்களை அடிமைப்படுத்தி, ஆட்டிப் படைப்பது எந்த விதத்தில் நியாயம்?

காட்டுப் பிராணிகளான எங்களின் வசிப்பிடங்களை மனிதன் அழித்து வருகிறான். அதுமட்டுமின்றி, எங்களை வேட்டையாடி பெரும் பொருளை ஈட்டி வருவதால் எண்ணிக்கையில் பல விலங்கினங்கள் அழிந்து வரக் கூடிய உயிரினங்கள் பட்டியலில் சேர்ந்து விட்டன.

காட்டுப் பிராணிகளை வேட்டையாடுவது பெரிய குற்றம் என்ற சட்டம் இருந்தால் மட்டும் போதாது. நீங்கள் ஒவ்வொருவரும் எங்களைப் போன்ற உயிரினங்களை நண்பர்களாக ஏற்றுக் கொண்டு எங்களையும் வாழ விட வேண்டும்.



நாகர்கோயில் டி.வி.டி மேல்நிலைப் பள்ளி ஸ்பெஷல்!

இயற்கை எழில் கொஞ்சும் குமரி மாவட்டத்தில் வணிக இடமாக விளங்குவது கோட்டாறு.



* தலைமை ஆசிரியை (மெட்ரிக் பள்ளி)

இப் பகுதியில் எழுந்தருளியுள்ள தேசிக விநாயகர் திருப்பெயரால் 1933ம் ஆண்டு 110 மாணவ, மாணவியர் மற்றும் ஆறு ஆசிரியர்களுடன் இப் பள்ளி தொடங்கப்பட்டது. இப் பள்ளி நயினார் தேசிக வினாயகர் தேவஸ்தான நிர்வாகத்தால் நடத்தப்பட்டு வருகிறது. 2000 மாணவ, மாணவியரும் நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களும் பணியாற்றுகின்றனர்.

ஆண்டுதோறும் 90% தேர்ச்சி இப் பள்ளி பெற்று வருகிறது.

கடந்த ஆண்டு +2 தேர்வில் மாவட்ட அளவில் இரண்டாம் இடத்தை இப்பள்ளி பெற்றது.

ஆண்டுதோறும் நடைபெறும் அறிவியல் கண்காட்சி இம் மாணவர்களின் திறமைக்கு எடுத்துக்காட்டு. என்.ஐ பொறியியல் கல்லூரி நடத்திய அறிவியல் கண்காட்சியில் இப் பள்ளி தமிழகத்திலேயே முதலிடம் பெற்று கணிப்பொறி பரிசு பெற்றது.

தேசிய மாணவர் படை, நாட்டு நலப் பணித் திட்டம் இளஞ்செஞ்சிலுவை சங்கம், சாரண - சாரணியர் இயக்கம் பசுமைப் படை, அறிவியல் கழகம் போன்ற அனைத்து சமூக இயக்கங்களும் இப் பள்ளியில் சிறப்பாக நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது.


இப்பள்ளி சாரண - சாரணியர்கள் ராஷ்ட்ரிய புரஷ்கர் விருது மற்றும் ராஷ்டிரபதி விருதுகளைப் பெற்றுள்ளனர்.



* தலைமை ஆசிரியர்



* செயலாளர்



* தலைவர்

அனைத்து விழிப்புணர்வு முகாம்களும் இப்பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்டு வருகிறது.

இப் பள்ளியின் தலைமையாசிரியர் எஸ். குமாரசுவாமி, செயலர் டாக்டர் தாணு, தலைவர் சிவகுருநாதன் நயினார் தேவஸ்தான தர்மகர்த்தாக்கள் மற்றும் பள்ளிக்குழு உறுப்பினர்களின் சீரிய ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் இப் பள்ளி மாவட்டத்திலேயே முதன்மையாகத் திகழ்கிறது.

இங்கு மேல்நிலைப்பள்ளி, மெட்ரிகுலேஷன் பள்ளி, ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஆகியவையும் உள்ளன.

முதன்மையான பள்ளி!



சாதனைகள்!

ஃபு மிங்ஷியா (சீனா) 1991 ஜனவரி 4ல் ஆஸ்திரேலியாவின் பெர்த்தில் நடைபெற்ற வேர்ல்டு பிளாட் பார்ம் டைவிங் பட்டத்தை வென்றபோது இவருக்கு வயது 12 வருடம் 14 நாட்கள்.

டயானே ஷீர் பிரிட் 1997ல் ஐந்து நிமிடத்தில் 225 தபால் தலைகளை கவரில் ஒட்டி சாதனை புரிந்தார்.

அலெக்சே லியனோவ் சோவியத் ரஷ்யா 1965, மார்ச் 18ல் நடைபெற்றது உலகில் முதல் விண்வெளி நடைப்பயணம்.

-ஆர்.எஸ். சரண்யா,
பதினோராம் வகுப்பு.

சுமை

சிந்திக்காத வரை
மூளை தலைக்குச் சுமை!
பயன்படாத வரை
பணம் பெட்டிக்குச் சுமை!
துணிவு இல்லாத வரை
பயம் வெற்றிக்குச் சுமை!
உழைக்காத வரை
மனிதா நீ உலகிற்கே சுமை!

- என். நட்ராஜ், பதினோராம் வகுப்பு

வந்தால் போகாதது?

வருவதும் போவதும் இன்பம் - துன்பம்
வந்தால் போகாதது புகழ் - பழி
போனால் வராதது மானம் - உயிர்
இயற்கையாக வருவது இளமை - முதுமை
நம்முடன் வருவது பாவம் - புண்ணியம்
அடக்க முடியாதது ஆசை - தூக்கம்

- எம். மணிகண்டன்,
பதினோராம் வகுப்பு

விடுகதை

1. இலையுண்டு கிளையில்லை; பூ உண்டு மணமில்லை; காய் உண்டு விதையில்லை; கன்று உண்டு பசு இல்லை - அது என்ன?

2. ஊருக்கு உழைக்கும் உத்தமன் உரக்க ஊதி குரல் எழுப்புவான் - அவன் யார்?

3. உச்சியில் குடுமி உண்டு. உடலெங்கும் ரோமம் உண்டு. சுழலாத விழிகள் மூன்றுண்டு. - அது என்ன?

- ஜி. சாரதி, ஒன்பதாம் வகுப்பு

விடைகள்: 1. வாழை மரம், 2. சங்கு, 3. தேங்காய்





**நாகர்கோயில்
டி.வி.டி மேல்நிலைப்
பள்ளி
ஸ்பெஷல்**

சுற்றுச் சூழல்

இயந்திர
வாழ்வை
விரும்பி
சீரழிப்பது
ஏன் மானிடா?
தாகம் தணிக்கும்
தண்ணீரையும்
தன்னைக் காக்கும் நிலத்தையும்
தனக்கென சொந்தம் கொண்டாடுவது ஏன்
மானிடா?
இயற்கை என்பது நிரந்தரம் - அதை
செயற்கையாக மாற்ற நினைக்கும் மானிடா
உன் கனவுகள்கூட இம் மண்ணில் நிரந்தரமில்லை

- எம். சிங்காரவேல், பதினோராம் வகுப்பு

---

1. நவ்ரோஸ் என்பது?
பெர்சியன் புது வருடப் பிறப்பு.
2. உலகின் முதல் விண்வெளி சுற்றுலாப் பயணி?
டென்னிஸ்டிட்டோ

- எம்.கே. ப்ரியா, பத்தாம் வகுப்பு


வெட்கப்பட்ட யானை!

சுந்தரவனக் காட்டில் கஜேந்திரன் என்ற யானை வசித்து வந்தது. அது வீண் சண்டைக்குப் போகாது; வந்த சண்டையை விடாது. ஒருநாள் வேங்கைப்புலி ஒன்று யானையை வம்பிழுத்தது. பொறுத்துப் பார்த்த யானை கோபத்துடன் வேங்கையைத் தூக்கி வீசி எறிந்தது. வலியால் துடித்த வேங்கை உயிர் தப்பித்தால் போதும் என்று அவ் விடத்தை விட்டுச் சென்றது. யானைக்கு சண்டை போட்ட களைப்பில் தூக்கம் வந்தது. நின்றுகொண்டே தூங்க ஆரம்பித்தது. அதன் கனவில் வேங்கைப் புலி மீண்டும் சண்டைக்கு வந்தது. உடனே சட்டென்று விழித்தது யானை. யானைக்கு முன்பாக ஒரு வேங்கை மரம் மஞ்சள் நிறப் பூக்களைப் பூத்தபடி நின்றிருந்தது. தூக்கக் கலக்கத்திலும் கோபத்திலும் யானைக்கு அது வேங்கைப்புலி போல் தெரிய, வேகமாக ஓடி வந்து துதிக்கையால் அடித்தது. மரம் அசையாமல் நிற்க, யானை நிதானத்துக்கு வந்து, தன் தவறை உணர்ந்தது. உடனே அதற்கு வெட்கம் வந்துவிட்டது. அன்றிலிருந்து வேங்கை மரத்தைப் பார்த்தால் யானைக்கு வெட்கம் வந்து தலை குனிந்து சென்று கொண்டிருக்கிறது.

- கே. அரவிந்த்,
ஆறாம் வகுப்பு 'டி' பிரிவு



நாகர்கோயில் டி.வி.டி மேல்நிலைப்பள்ளி ஸ்பெஷல்!



ஐ.டி. சத்யா, ஐந்தாம் வகுப்பு



பி. தாயு, இரண்டாம் வகுப்பு



ஜி.பி. விமல்ராஜ், ஆறாம் வகுப்பு



ஜே. அன்கி, இரண்டாம் வகுப்பு



எஸ். சுஷில்குமார், பதினோராம் வகுப்பு,




கணேஷ் இரண்டாம் வகுப்பு




பி. அஸ்வின் மகேஷ், ஆறாம் வகுப்பு



டி.ஜே. தர்மா ஸ்ரீ, ஐந்தாம் வகுப்பு




செல்வம்



கே.கே. சொக்கலிங்கம், ஐந்தாம் வகுப்பு



கே. சின்னகணேஷ், இரண்டாம் வகுப்பு



குறுக்கெழுத்துப் புதிர்

கட்டங்களை நிரப்புங்கள்

இடமிருந்து வலம்:

1. எந்தப் பக்கமாக வாசித்தாலும் இவன் சிரிக்க வைப்பவன்தான் (5)

3. ஆள்வது என்பதை இப்படியும் கூறலாம் (3)

5. பாரதியார் ஒரு மகா ______ (2)

6. அரசன் மலையமான் ஒரு கனியை இழந்தால் குறிஞ்சி நிலத் தலைவன் ஆவான் (4)

7.ஆற்றலை அளக்க உதவும் விலங்கு (3)

9. த இழந்த மரகதம் ஒரு ராசியைத் தரும் (4)

11. இதைச் செய்ய விரும்ப வேண்டும் என்பார் ஒளவை (3)

12. நீர்ப் பெருக்கை இப்படியும் சொல்லலாம் (4)


13. பூவின் அடிப்பகுதி (3)

15. கவிஞர் (4)

17. சாக்லேட் முழுவதையும் ______ செய்து விடு(2)

18. நீர்ப் பரப்புக்கு நடுவே இருக்கும் மணல் மேடு (3)

19. எலும்பு வளர்ச்சிக்கு உதவும் தனிமம் .(5)



மேலிருந்து கீழ்:

1. இருட்டை விலக்க இதனை ஏற்ற வேண்டும் (4)

2. இதனைக் கொறித்துக் கொண்டே இதனைப் பார்க்கலாம் (3)

3. ஜலதோஷம் வந்தால் நாம் பிடிப்பது (2)

4. காட்டு ராஜா (4)

5. வினைப் பயன் (4)

6. ______ யாணி என்றால் திருகாணி என்று பொருள் (2)

8. உருண்டை; சேர் என்றும் பொருள் படும் (3)

10. தேர் (3)

11. கடிக்காத புலி, காலில்லா புலி, வானில் வரும் புலி (4)

12. பரிசு. முடிவில் நிலா உண்டு (4)


13. கருமை, மேகம், மழை இதன் பிறகும் விடை தெரியவில்லை என்று புகார் கூறுவதா? (2)

14. முகத்தில் இது இரண்டு இருக்கும். கண்களுக்கு மேலே (4)

16. பயிர்கள் விளையும் இடம் (3)

17. கானகம் (2)

- மா. கண்ணன்,
இராஜபாளையம்



விடை 26ஆம் பக்கம்



காமதேனுவின்

அச்சுதனும் பிச்சு மணியும் இணை பிரியா நண்பர்கள்.

அப்போது நாட்டில் மழையில்லாமல் பஞ்சம் தலை விரித்தாடியது. ஊர் பெரியதனக்காரர் நாடகங்கள் போட்டுக் கொண்டிருந்தார். "ஏதோ நம்மாலானது! கலைஞர்கள் பசியையாவது தீர்ப்போம். அதோடு ஜனங்களும் கவலையை மறந்து கொஞ்ச நேரமாவது இருக்கட்டும்" என்று ஜம்பமாகப் பேசினார்.

முதல்நாள் 'நல்ல தங்காள்' நாடகம் நடந்தது. ஊர் முழுவதும் நாடகக் கொட்டகையில்தான் இருந்தது.

அச்சுவும் பிச்சுவும் இது கண்டு கொதித்தனர். பணக் காரருக்குப் பாடம் புகட்ட தீர்மானித்தனர். கையிலிருந்த பணத்தைப் போட்டு அரிசி நொய் வாங்கி கூழ் தயாரித்தனர். கூழ் மணம் கூத்துக் கொட்டகையிலிருந்தவர்களை ஈர்த்தது.

"தெரிஞ்ச கதைதானே!" என்று ஒவ்வொருவராக வெளியே வந்தனர்.

"உள்ளே போய் மாரியாத்தா கோயில் பூசாரியைக் கூட்டிட்டு வாங்க. ஆத்தாளுக்கு நைவேத்தியம் பண்ணினதும் எல்லாம் உங்களுக்குத்தான்! வரிசையிலே வந்து வாங்கிட்டுப் போங்க" என்றான் அச்சுதன்.


கொட்டகைக்கு உள்ளே ஓடிய சிலர் பூசாரியைத் தேடிப் பிடித்து காதில் செய்தியை ஓதினர். அவ்வளவுதான்! பூசாரி மட்டுமா வந்தார்? விஷயம் காட்டுத் தீயெனப் பரவ கிட்டத்தட்டக் கொட்டகையே காலியாகி விட்டிருந்தது!

நல்லதங்காள் அழுது கொண்டே குழந்தைகளைக் கிணற்றில் போட வேண்டிய காட்சி! குழந்தைகள் ஏழு பேரும் மேடையை விட்டு கீழே குதித்தனர்.

"எங்கேடா போறீங்க?" நல்லதங்காள் வேடமிட்டவர் பரபரப்பாகக் கேட்டார்.

"பசிக்குதுங்க! கஞ்சியைக் குடிச்சிட்டு வந்துடறோம். அப்புறம் கிணத்திலே போடலாம்" என்று கடைசியாக ஓடிய சிறுவன் பதில் சொன்னான்.

பெரியதனக்காரர் ஆக்ரோஷத்தோடு அச்சு - பிச்சுவின்



பேத்தி!

மாலதி

முன்னால் போய் நின்றார்.

''என்னைப் பகைச்சுக்கிட்டா என்ன நடக்கும் தெரியுமா? எதுக்குடா கஞ்சி காச்சறீங்க?'' என்று கோபத்தோடு கேட்டார்.

''ஐயா, கோவிச்சுக்கப்படாது. ஆத்தா உங்க கனவுலே வந்து 'நாடகம் போடு, மழை பெய்யும்'னு சொன்னமாதிரி எங்க சொப்பனத்திலே வந்து 'அவரு நாடகம் போடுறார். நீங்க கூழ் ஊத்துங்க'ன்னாங்க! அதான்...'' என்று தலையைச் சொறிந்தான் அச்சு.

பண்ணையாரால் எதுவும் பேச முடியவில்லை. கூழை அவரே முன்னின்று அம்மனுக்கு நிவேதனம் செய்து மக்



களுக்கு ஊற்றினார்.

அப்புறம் என்ன? ஊர் பெரிய மனிதர்களெல்லாம் போட்டி போட்டுக் கொண்டு கூழ் வார்க்க நாட்டில் பசிப்பிணி தீர்ந்தது. அச்சு - பிச்சு நிலைமைக்குக் கூழ் வார்த்தால் நாமும் கஞ்சி காய்ச்சுவதா என்று பெரியதனக்காரர் அன்னதானமே செய்தார்!

அச்சுவும் பிச்சுவும் மனதிற்குள் மகிழ்ந்தனர்.

ஒரு பெரிய செல்வந்தர் வீட்டுத் திருமணம். அதற்கு அச்சுவும் பிச்சுவும் சென்றிருந்தனர். ஏகப்பட்ட இனிப்புகளோடு விருந்து தடபுடலாயிருந்தது. எத்தனை தடவை சாப்பிட்டாலும் எதை எடுத்துச் சென்றாலும் ஏனென்று கேட்பாரில்லை!

இதனால் விருந்து மண்டபத்துக்கு வெளியே பசியோடு பலர் காத்திருந்தனர். அச்சுவும் பிச்சுவும் வாயிற்கதவருகே நின்று பலரை உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தனர்.

ஒருவன் தான் சாப்பிட்டு முடித்தும் அடுத்த பந்தியில் அமர்ந்து பட்சணங்கள், பழங்கள், வறுவல் இவற்றை ஒரு பையில் போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தான் அச்சுதன். அவன் ஜாடை காட்ட பிச்சு அருகில் வைக்கப்பட்டிருந்த குவளை நீரை பைக்குள் ஊற்றினான்.

விருந்தினன் சினத்துடன் "ஏன் இப்படி செய்தாய்?" எனக் கத்த "பைக்கு விக்கிக் கொள்ளாதா? ஜீரணம் ஆகட்டுமே என்று தண்ணீர் கொடுத்தால் அது தப்பா?" என்றான் பிச்சு.

கூடியிருந்தவர் நகைக்க அவமானத்துடன் பையை அப்படியே போட்டுவிட்டு ஓடினான் விருந்தாளி.

அதிலிருந்து கையில் எடுத்துச் செல்வதை எல்லோரும் கைவிட்டனர்.


மணப்பாறை மாட்டுச்சந்தை. ஓர் அப்பாவி மாட்டோடு நின்று கொண்டிருந்தான். அச்சு அவனிடம் சென்று "மாடு விற்க வந்தாயா?" என்று கேட்க அவன் 'ஆமாம்' எனும்படி தலையசைத்தான்.

"பேசாம நின்னா மாடு விக்குமா? எல்லாரும் மாடு வாங்கின பிற்பாடு உன் மாடு எப்படி நல்ல விலைக்குப் போகும்? சுடச்சுட விற்க வேண்டாமோ?" என்றான்.

பிறகு, "அருமையான காராம் பசு! இதனுடைய தாய் வழிப்பாட்டிதான் காமதேனு. கொட்டிலில் இருந்தாலே செல்வம் கொழிக்கும் ராசியானது! இதனுடைய பாலுக்கு மருத்துவகுணம் உண்டு. வேளைக்கு ஒருகுடம் பால் கறக்கும்" என்று அச்சுவும் பிச்சுவும் குரல் கொடுக்க அது எல்லோர் கவனத்தையும் கவர்ந்தது. கூட்டம் கூடியது. வியாபாரிகள் மாட்டை வாங்கப் போட்டியிட்டனர்.

அப்பாவி "அடேயப்பா! இதுக்கு இத்தனை மவுசா? மாட்டை நான் யாருக்கும் விற்கிறதாயில்லை! எங்க பாட்டியை முட்டி படுத்த படுக்கையா இருக்கிறதாலே அப்பா கோபப்பட்டு சந்தைக்குக் கொண்டு போன்னுட்டாரு! காமதேனுவோட பேத்தின்னு அப்பாவுக்குத் தெரியாது போல! நான் போய் சொன்னா புரிஞ்சுக்குவார்! அரைப்படி பால்தான் அப்பா கறப்பாரு! ஒருகுடம் பால் கறக்குமின்னு தெரியாமப் போச்சே!" என்றபடி மாட்டை வீட்டுக்கு ஓட்டிக் கொண்டு போனான்.

அச்சுவும் பிச்சுவும் பிரமித்து நின்றனர்.



அப்பாவி குழந்தைகள் தினம்

ஏரோது ராஜா பெத்லஹேமில் உள்ள எல்லா குழந்தைகளையும் கொன்று குவித்திட கட்டளையிட்டார். குழந்தை ஏசுவை கொல்ல நடந்த சதி இது. இந்த அப்பாவிக் குழந்தைகளை நினைவு கூறும் வகையில் டிசம்பர் 28ஆம் நாளை ரோம, கிரிக், ஆங்கில சர்ச்சுகளில் அப்பாவி குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது.


- ஆறுபாதி புகழேந்தி

பாம்புக்கும் எதிரிகள்!


ஆழி




'பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்' என்பார்கள். ஆனால் பாம்புக்கும் பல எதிரிகள் இருக்கின்றன. சிறிய பாம்புக்குப் பெரியபாம்பு எதிரிதான்! விஷம் இரத்தத்தில் கலந்தால்தான் ஆபத்து. பெரும்பாலும் பாம்பைக் கொல்லுகிற, கொன்று தின்கிற பிராணிகளுக்குத் தோல் தடிப்பாகவும், தோலுக்கு அடியில் கொழுப்புப் படலம் அதிகமாகவும், உடலில் உரோமங்கள் அடர்ந்தும் இருக்கும். தவிர, விஷ எதிர்ப்புச் சக்தியும் அதிகம். எனவேதான் பாம்புகளை அவை பயமின்றித் தாக்குகின்றன.




பாம்புக்கும் கீரிக்கும் பகை என்பது எல்லோருக்கும் தெரியும். கீரி, ஒரு நல்ல பாம்பைப் பார்த்ததும் அதன் உடம்பில் உள்ள உரோமங்கள் குத்திட்டு நிற்கும். அந்தத் தோற்றத்தைப் பார்த்ததுமே பாம்புக்குக் கதி கலங்கிவிடும். ஆனாலும் சமாளித்துக் கொண்டு கீரியுடன் சண்டை போடும்.




கீரியிடம் விஷ முறிவுச் சக்தி இருப்பதால் பாம்பு, கீரியைக் கடித்துவிட்டாலும் ஒன்றும் ஆகாது! பெரும்பாலும் பாம்பு, கீரியிடமிருந்து தப்பி ஓடவே முயற்சி செய்யும்!






கீரியைப் போலவே 'ஒப்போசம்' என்னும் பிராணியும் பாம்புகளைக் கடித்துக் குதறிவிடும்!


தென் ஆப்பிரிக்காவில் உள்ள 'பாட்ஜர்' என்னும் கரடி போன்ற பிராணி எல்லாவிதப் பாம்புகளுக்கும் எதிரிதான். பாட்ஜரின் தோல் மிகவும் தடித்து உரோமங்கள் அடர்ந்து இருக்கும். பாம்பின் விஷப் பற்கள் இதன் தோலைத் துளைக்க முடியாது. விஷம் உடலுக்குள் இறங்காது. பாட்ஜர் தன் கூரிய வளைந்த நகங்களினால் பாம்பைக் கிழித்துக் கொன்று தின்றுவிடும்!




கடுமையான விஷம் கொண்ட 'கண்ணாடி விரியன்'பாம்புக்கு முள்ளம்பன்றி ஒரு பெரிய விரோதி. அது தன் உடம்பில் உள்ள கூரிய தடித்த முட்களால் பாம்பைக் குத்திக் கொன்று விடும்! பாம்புடன் சண்டையிடும்போது,முள்ளம் பன்றி தன் உடலைப் பந்துபோல் சுருட்டிக் கொண்டு, முட்களைச் சிலிர்த்தபடி வைத்துக் கொண்டு குத்தும். பாம்பு இறந்ததும் அதைத் தின்றுவிடும்.முள்ளம் பன்றியை வேறு எந்தப் பிராணியும் ஒன்றும் செய்துவிட முடியாது!

பன்றிகளின் அதிகமான எடை பாம்பை அழுத்துகிறது. பன்றிகள், பாம்பைக் காலால் மிதித்துக் கொண்டு, கடித்துப் போடுகின்றன. ஆனால், தின்பதில்லை.






ஓநாய் விஷப்பாம்புகளையும் தின்றுவிடும்!




மான்கள் வலிமைமிக்க கால் குளம்புகளால் பாம்புகளை மிதித்துக் கொன்றுவிடுகின்றன.




பாம்பு, தவளையைத் தின்பது தெரிந்த விஷயம். ஆனால், 'அமேசான் காட்டுத் தவளை' ஒரு பெரிய பாம்பைக் கூட விழுங்கி விடும். அந்தப் பெரிய தவளை ஒரு பாம்பை விழுங்கி முடிக்க 36 மணி நேரம் ஆகிறது!




கடல் பாம்புகளுக்குச் சுறாமீன்கள் எதிரி. கடல்பாம்பின் விஷம் கடுமையானது. ஆனால், சுறாமீன்களுக்குத் தடித்த தோல் இருப்பதால் பாம்பின் விஷம் பாதிப்பதில்லை!



தென் ஆப்பிரிக்கக் காட்டில், 'ஆடர்' என்னும் விரியன் பாம்புகளுக்கு, 'சிவப்பு எறும்பு'களே எதிரி. அவை ஆயிரக் கணக்கில் ஒன்று சேர்ந்து அந்தப் பாம்பைக் கடித்துக் கொன்று ஒரு மணி நேரத்துக்குள் தின்று தீர்த்து விடும்!



இறகுகள் அடர்த்தியாகவும், அலகு உறுதியாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கும் பறவைகள் பாம்புகளைக் கொல்கின்றன. 'எகிப்து நாரை' பாம்புக்கு எதிரி. அது பாம்பைக் கால்களால் மிதித்துக் கொண்டு நீண்ட அலகால் குத்திக் கொன்று தின்று விடும்!



ஆப்பிரிக்காவில் உள்ள 'செகரட்டரி பறவை'யின் முக்கிய இரையே விஷப் பாம்புகள்தாம்! அந்தப் பறவை, பாம்பைக் கொத்தி ஆகாயத்தில் வீசி எறிகிறது. கீழே விழுந்து அடிபட்டு மயக்கம் அடையும் பாம்பைக் கொன்று தின்கிறது.



ஆந்தைக்குக் கூர்மையான அலகு. அது 'கிலுக்குப் பாம்பை'த் தின்கிறது. பெரிய பாம்பை விட, குட்டிகளை அது எளிதாகப் பிடித்து விடுகிறது.




காட்டில், பாம்புகளைப் பிடித்துத் தின்பதற்காகச் சிலசமயம் பாம்புப் புற்றுகளுக்கே போய்விடும் மயில்!

சுவீடன் நாட்டு மலைகளில் வாழும் ‘கிரீடக் கோழி’க்குப் பிடித்த இரை பாம்புதான்!




‘கின்னிக் கோழி’யை வீட்டில் வளர்க்கிறவர்களுக்குப் பாம்பு பயம் இல்லை. ஏனென்றால், அது பாம்புகளை விரட்டி விரட்டிக் கொல்கிறது!







அமெரிக்காவில் உள்ள ‘போயா’ என்னும் மலைப்பாம்புக்கு அங்கே உள்ள ‘கண்டோர்’ என்னும் பெரிய கழுகு எதிரி. அந்தப் பாம்பை இந்தக் கழுகு கிழித்துக் கொன்றுவிடும்!

புதிய கோள்களும் புருனோவின் உண்மைகளும்!







• புருனோ

இரவு வானில் வைரம் போல் ஜொலிக்கும் பல ஆயிரக்கணக்கான விண்மீன்களைப் பார்த்திருப்பீர்கள். நமது சூரியனும் ஒரு விண்மீனே! மிக மிகத் தொலைவில் விண்மீன்கள் இருப்பதால் நம் கண்களுக்கு ஒளிப் புள்ளியாகக் காட்சி தருகின்றன.

சூரியனைச் சுற்றி வரும் கோள்களில் இது வரை நாம் அறிந்ததில் பூமியில் மட்டும்தான் உயிரினம் உள்ளது. இதில் சிந்திக்கும் திறனும் பகுத்தறிவும் உடைய மனித இனம் முக்கியமானது.

இரவு வானில் கோடிக்கணக்கான விண்மீன்களைச் சுற்றி கோள்கள் வருகின்றனவா? அக்கோள்களில் உயிரினம் உண்டா?

இன்று அறிவியல் உலகம் ஆராய்ச்சி செய்யும் விஷயங்களில் இதுவும் ஒன்று. சூரிய மண்டலத்திற்கு புறத்தே வேறு விண்மீன்களை வலம் வரும் கோள்களைப் புறக் கோள்கள் என்று அழைக்கின்றனர்.

மிகத் தொலைவில் உள்ள புறக்கோள்களை நேரடியாக காண்பது சாத்தியமில்லை. என்றாலும் மறைமுக வழிகள் உண்டு.

நிறையுடைய இரண்டு பொருட்கள் ஒன்றை ஒன்று ஈர்க்கும் என்பது நியூட்டனின் விதி. இந்த விதிப்படி புறக் கோள்களை அறியலாம்.

ஒரு விண்மீனைச் சுற்றி கோள் வலம் வரும் எனில் கோளின் நிறை காரணமாக அதன் ஈர்ப்பு சக்தி விண்மீன் மீது தாக்கம் செலுத்தும். எனவே விண்மீன்களின் நிலை நிலையாக இருக்காது; மாற்றம் புலப்படும். தள்ளாடுவது போல் காணப்படும்.

விண்மீன்களைத் தொடர்ந்து உற்று நோக்குவதன் மூலம் விண்மீன்களின் நிலையைக் கணக்கிடலாம். காலப்போக்கில் ஏதேனும் மாற்றம் ஏற்படுகிறதா என்று பார்க்கலாம். இதன் மூலம் வேறு விண்மீன்களுக்கும் கோள்கள் உண்டா என்பதைக் கண்டறியலாம். இந்த வழிக்கு 'ஈர்ப்பு சக்தி' முறை என்று பெயர்.

ஈர்ப்பு சக்தி முறையின் மூலம் இதுவரை 120 கோள்

த.வி. வெங்கடேஸ்வரன்

களை இனம் கண்டுள்ளனர்.

இது தவிர இடைமறிப்பு முறையும் உண்டு. அதாவது கோள்கள் தமது பாதையில் முன்னும் பின்னுமாகச் சுற்றி வரும்போது சில சமயம் நமது பார்வையை மறைக்கும் முகமாக அமையும். அச் சமயத்தில் விண்மீன் இடைமறிக்கப்படுவதால் அதன் பிர காசம் மங்கும். இவ்வாறு புலப்படும் பிரகாசத்தில் ஏற்படும் மாற்றங்களைத் தொடர்ந்து உற்று நோக்கினால் கோள்கள் இருப்பதை உறுதிப்படுத்தி விட முடியும்.

இந்தமுறை மூலம் பிரகாசமான விண்மீன்கள் முதல் கட்ட ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. 2004 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24ந் தேதி அன்று ஒரு புறக்கோள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் டிரேஸ் - 1. இது வியாழன் கோள் போன்ற நிறையும் பருமனும் உடையது என்பது தெரிய வந்துள்ளது. இந்த டிரேஸ் - 1, 72 மணி நேரத்துக்குள் வலம் வந்து விடுகிறது என்றால் அதன் வேகத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள்! நம் பூமி 365 நாட்களில் சூரியனை வலம் வருகிறது. டிரேஸ் -1 கோளின் மேற்பரப்பில் 1500 டிகிரி வெப்பம் இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. 100 டிகிரி வெப்பத்தில் நீர் ஆவியாகி விடும்; 1500 டிகிரியில் இரும்பு தண்ணீராக ஓடும். ஆகவே இக் கோளில் உயிர் வாழ சாத்தியமில்லை.

சுமார் 12,000 விண்மீன்கள் ஆய் வுக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 16 விண்மீன்களிடமே கோள்கள் இருப் பதற்கான வாய்ப்பு கண்டறியப் பட் டது. இந்த 16 விண்மீன்களை உற்று நோக்கியதில் டிரேஸ் - 1 கண்டறியப் பட்டது. இது சுமார் 500 ஒளி ஆண்டு தொலைவில் உள்ளது.

'வானில் தெரியும் விண்மீன்கள் எல்லாம் தொலைவில் உள்ள சூரியன் கள். அவற்றைச் சுற்றியும் கோள்கள் இருக்கலாம்' என்றார் புருனோ என்ற அறிஞர். இக் கருத்துக்காக பிற்போக்கு வாதிகளால் உயிருடன் எரிக்கப் பட்டார் புருனோ.

டிரேஸ் - 1 புறக்கோள் கண்டு பிடிக்கப்பட்டதன் மூலம் புருனோவின் கருத்து நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

குறுக்கெழுத்துப் புதிர் விடை



1 வி	க	ட	2 க	வி	■	3 ஆ	ட்	4 சி
ள	■	■	ட	■	5 க	வி	■	ங்
க்	■	6 ம	லை	ய	ன்	■	■	க
7 கு	8 தி	ரை	■	■	9 ம	க	10 ர	ம்
■	ர	■	11 அ	ற	ம்	■	த	■
12 வெ	ள்	ள	ம்	■	■	13 கா	ம்	14 பு
கு	■	■	15 பு	ல	16 வ	ர்	■	ரு
ம	■	17 கா	லி	■	ய	■	■	வ
18 தி	ட்	டு	■	19 கா	ல்	சி	ய	ம்



கழுதைக்

அன்று அறிவு தன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து விபரீதமான ஒரு யோசனையைச் செய்து கொண்டிருந்தான். அது கேள்வியாக முளைத்து கடகடவென்று பெரிய ஒட்டகச்சிவிங்கி மாதிரி வளைந்து நின்றது. அதேசமயம் சாமிமேல் கோபம் கோபமாய் வந்தது அவனுக்கு.

'இந்தச் சாமி ஏன் எனக்கு பாரபட்சம் செய்துட்டார்? கழுதைக்கு மட்டும் காதை பெரிசா வைச்சுட்டு எனக்கு மட்டும் சின்னக் காதுகளா வைச்சுட்டாரே...?'

நினைக்க நினைக்க துக்கம் பெருகியது. துக்கம் பெருகிப் பெருகி அழவே ஆரம்பித்து விட்டான்.

அவன் அழுததைப் பார்த்து கிராமமே திரண்டுவிட்டது. பஞ்சாயத்து தாத்தா அவனது பிரச்னையைத் தீர்த்துவிட முடிவு செய்தார். சுற்றி நின்ற மக்களுக்கும் அவனது குறை என்னவென்று தெரிந்து கொள்ள ஆவலோ ஆவல்.

''உன்னோட பிரச்னை என்னடா...?'' அன்பொழுகக் கேட்டார் தாத்தா.

அறிவு கண்களைக் கசக்கிக் கொண்டே சொன்னான்: ''எனக்கு மட்டும் ஏன் காதுகள் ரெண்டும் சின்னதாயிருக்கு? எனக்கும் கழுதைக் காது வேணும்...!''

அவனது கோரிக்கையைக் கேட்டுச் சுற்றி நின்றிருந்தவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

'அட, இந்தப் பயலுக்குத்தான் எப்பேர்ப்பட்ட கேள்வியெல்லாம் தோணுது?'

தாத்தா எப்படி அவனது பிரச்னையைத் தீர்ப்பது என்று குழம்பி விட்டார்.


''இதுக்கு என்ன பதில் சொல்றது?'' என்று மக்களைப் பார்த்து தலையைச் சொறிந்தார்.

கூட்டத்திலிருந்த ஒரு அம்மா சொன்னார்: ''அது ஒரு கேள்வி? அதுக்கு ஒரு பதில் கேக்குதாக்கும்? எல்லோரும் அவங்கவங்க வேலையைப் பார்த்துகிட்டுப் போங்க...!'' என்று ஒரு நொடி நொடித்து சிரிக்க, கூட்டமே அறிவைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தது.

''தம்பி, நான் உனக்கொரு யோசனை சொல்றேன். நம்ம ஊர் துணி வெளுக்கும் சின்னான் வீட்டுக் கழுதைக்கிட்டே போய் அதனோட காதுகளைக் கேட்டு வாங்கிப் போட்டுக்கோடா...!'' என்றார் தாத்தா.

அறிவுக்கு இப்போதுதான் நிம்மதி பிறந்தது. உடனே, கழுதையைத்தேடி ஓட்டமெடுத்தான்.

அன்று சின்னான் வீட்டுக் கழுதை மிகவும் விசனமாய்



காது

❁ புதுவை ரா.ரஜனி ❁

இருந்தது. அது தன் எசமானன் மீது கோபமாகவும் இருந்தது.

'சே, என்னடா வாழ்க்கை இது? ருசியே இல்லாத வாழ்க்கை வாழ்க்கையா? தினமும் ரெண்டுவேளை பழங்கஞ்சியும் கொஞ்சம் புல் கத்தையும்தான் சாப்பிடுறதுக்கு கிடைக்குது. பிறகு, நாற்றம் புடிச்ச ஊரார் துணிமணிகளை மலை மலையாச் சுமந்து ஆற்றங்கரைக்குப் போகணும். எசமானும் பாவந்தான்! மூச்சு முட்ட அடிச்சுத் துவைப் பார்.ஆற்று மணலில் துணிகளை உலற வைப்பார். காய்ந்ததும் அவற்றை மறுபடி என் மேல் ஏற்றி வைத்துவிடுவார். நான் சுமந்து, ஆடி அசைந்து வீடு வந்து சேர ணும்...!' கழுதை பெருமூச்சு விட்டது. "ம், இதுதான் என் வாழ்க்கையா?" என்று அலுத் துக்கொண்டே பூமியைப் பார்த்தவாறு நின்றிருந்தது.

அறிவு அதனருகில் வந்து நின்றான். கழுதை அவனை நிமிர்ந்து நோக்கியது.

"கழுதையண்ணா, கழுதையண்ணா... எனக்கு நீ ஓர் உதவி செய்வாயா?" என்று



கேட்டான்.

கழுதை, "அடடே அறிவு தம்பியா? உனக்கு நான் என்ன உதவி செய்யணும்?" என்றது.

"உன்னோட காதுகளை எனக்கு கொடுத்துடேன்...!"

"ஏன், உனக்குதான் இருக்கே..?"

"என்னோட காதுகள் ரொம்பச் சின்னதா இருக்கு. உனக்குதான் எவ்ளோ அழகான பெரிய காதுகள்!"

கழுதை உள்ளுக்குள் சிரித்துக் கொண்டது.

'ஆஹா, சரியான மண்டுப்பயல் மாட்டிக் கிட்டான். இவனை வைத்து நான் என் ஆசைகளைத் தீர்த்துக் கொள்வேன்...!' என்று எண்ணியபடி அவனிடம் கேட்டது:

"தம்பி, நான் சொல்றதையெல்லாம் பத்து நாட்களுக்குச் செய்வாயா? என் காதுகளை உனக்கே தந்துடறேன்...!"

"கழுதையண்ணா, நீ மடுவிலேருந்து மலை வரைக்கும் எது கேட்டாலும் நொடியிலே கொண்டு வருவேன்...!"

கழுதைக்கு நீண்ட நாட்களாக மனிதர்கள் சாப்பிடும் முழு விருந்து சாப்பிட ஆசை!

"எனக்கு கல்யாண விருந்து வேணும்...!"

அறிவு மாரியாத்தா கோவிலை நோக்கி ஓடினான். அங்கு ஒரு கல்யாணம் நடந்து கொண்டிருந்தது.

இலையோடு சாதம், சாம்பார், தொட்டுக்கொள்ள பலவகைக் காய்கறிகள், பாயசம், வடை, அப்பளம் முதலியவற்றை கழுதையிடம் கொண்டு வந்து வைத்தான்.

விருந்தின் வாசனை அதற்கு மூக்கைத் துளைத்தது. சப்புக் கொட்டிக் கொண்டு நாக்கைச் சுழற்றி விருந்தைச் சாப்பிட்டது. பாயசமும் வடையும் அதற்கு மிகவும் பிடித்தது. அப்பளமோ அதைவிட சுவையோ சுவை!

அதன்பிறகு, கழுதைக்கு நல்ல கொண்டாட்டம்தான்!


உச்சி மலையிலிருந்து நல்ல பசுமையான புற்கள், ஆப்பக்கார பாட்டி தயாரிக்கும் ஆப்பம், இட்லிகள், தோசைகள், இடையிடையே கல்யாணச் சாப்பாடு...

உணவு கூடக்கூட கழுதை கொழு கொழுவென்று வளர்ந்தது. காதுகளும்கூட இன்னும் வளர்ந்து பெரிசாயின. சதா நேரமும் தூங்கி வழிந்து கொண்டு கழுதை மந்தமாயும் சோம்பேறியாயும் ஆகிப் போனது!

பத்தாம் நாள். "கழுதையண்ணா, இன்னிக்குப் பத்தாவது நாள்...!" என்று அறிவு ஆவலாய் ஞாபகப்படுத்தினான். அப்பொழுதுதான் கவனித்தான். கழுதை மிகுந்த சோகமாய்க் காணப்பட்டது. அவன் பதறிப் போனான். இத்தனை நாட்கள் தான் கொடுத்த உணவுகளில் ஏதேனும் குறையோ...?

"ஏன் சோகமாயிருக்கிறே...?" என்று கேட்டான்.

கழுதை சலித்துக்கொண்டே, "ம்...! இப்படி எத்தனை ருசியா பதார்த்தங்களைச் சாப்பிட்டும் என் நாக்கு திருப்தி அடையலை. அது ஏனென்று தெரியலை. இன்னைக்கு கடைசி நாள். அறிவுத் தம்பி, நான் இதுவரை



சாப்பிடாத ஒன்றை நீ சாப்பிடக் கொண்டு வரணும்...!'' என்று கட்டளையிட, அறிவு மறுபடி ஓடினான். ''சாப்பிடாத ஒன்று என்பது எது?'' என்று குழம்பினான்.

'மனுசங்க சாப்பிடற எல்லாத்தையும் அதுக்கு கொடுத்தாச்சு. இன்னும் திருப்தி அடையலையே...?' என்று யோசித்தபடி, ஊர் ஆலமரப் பொதுமேடையில் அமர்ந்தான். அந் நேரத்தில் கிராம மக்கள் பரபரப்பாக ஓடுவதும் வருவதுமாக இருந்தார்கள். அவர்களது கைகளில் காற்றில் சிலுசிலுவென்று படபடக்கும் புதிய பொருள்! அதைப் பார்த்தும் தொட்டும் அதிசயமாய்ப் பேசினார்கள்.

அறிவு ஒருவரிடம், ''இது என்ன கையிலே வச்சிருக்கீங்க...?'' என்று கேட்டான்.

''அட மண்டுப் பயலே, இதுக்குப் பேர் காகிதமாம்! சீன தேசத்துல புதுசா கண்டு பிடிச்சிருக்காங்கலாம். இனிமேல் நாம மணலிலும் தவிட்டிலும் எழுதிப் பழக வேண்டாமாம். இந்த அற்புதப் பொருளான காகிதத்திலேயே எழுதிடலாம்...!''

''எனக்கு ஒண்ணு தருவீங்களா?''- அறிவு. அவரிடம் நிறைய காகிதங்கள். பாவப்பட்டு அவனுக்கு நாலைந்து துண்டுக் காகிதங்களைக் கொடுத்தார்.

கழுதை பார்த்தது. அதற்கு அதொன்றும் ஆச்சரியப்படத்தக்கப் பொருளாய் தெரியவில்லை. அது பார்ப்பதற்கு அப்பளம் போன்றேதான் இருந்தது!

அறிவின் கையிலிருந்த காகிதத்தை, கழுத்தை நீட்டி, இழுத்துத் தின்றது. 'ஆஹா! அது தன் வாழ்நாளில் இப்படியொரு சுவையைக் கண்டதில்லை! விருந்தாவது... மண்ணாவது...? அறிவு கொடுத்த அதிசய உணவுதான் அதிசயமான, அற்புதமான சுவையான 'சுரசுரமொறுமொறு' திண்பண்டம்!

அது மகிழ்ச்சியில் 'காள்...காள்..!' என்று கத்தி தன் பெரிய பட்டைப்பற்களைக் காட்டிக்கொண்டு சிரிக்க... அறிவுக்கும் ஆனந்தம் தாங்கவில்லை.

''கழுதையண்ணா! உன்னைச் சந்தோஷப்படுத்திட்டேன். எனக்குக் காதுகளைக் கொடு...'' என்று அதிகாரமாகக் கேட்டான்.

கழுதை, 'இது என்னடா வம்பு!' என்றெண்ணி, ''அறிவுத் தம்பி, என் காதுகளை அறுத்துக் கொடுத்தா எனக்கு ரத்தம் கொட்டும். உனக்குத் தர முடியாது'' என்றது.

''அதெல்லாம் முடியாது. நீ கொடுத்த வாக்கைக் காப்பாத்த வேணும்...!'' என்று அறிவு அடம் பிடித்தான்.

கழுதை, 'இவனிடமிருந்து தப்புவதற்கு என்ன வழி?' என்று யோசித்து, பிறகு சொன்னது:

''சரி, நீ கண்களை இறுக மூடிக் கொள். அப்போதுதான் நான் காதுகளை அறுத்துக் கொடுக்க முடியும். நான் சொல்கிற போதுதான் கண்களைத் திறக்கணும்!''


அறிவு கண்களை இறுக மூடிக் கொண்டான்.

உடனே, கழுதை விடுவிடுவென்று ஓடிப்போய், தன் எசமானனின் கிணற்றடியில் மறைந்து கொண்டது. பிறகு அங்கிருந்து குரலெழுப்பியது:

''அடே, அறிவுத் தம்பி! நான் அறுத்துக் கொடுக்க என் காதுகளைப் பிடிச்சதுமே கட்டெறும்பா மாறிட்டேன்... கண்களைத் திறந்து கீழே பார்...!'' என்றது.

அறிவு பார்த்தான்.

தரையில் ஒரு கட்டெறும்பு ஓடிக் கொண்டிருந்தது!



அதிவேக ரயில்!

சீனாவில் ஹாங்காங்கில் இருந்து பீகிங்கிற்கு 1200 மைல் தூரத்தை ஆறு நாட்களில் கடக்கும் ரயில் ஒன்று உண்டு. இதில் என்ன விசேஷம் என்றால் இது இரவு நேரத்தில் மட்டும்தான் ஓடும். பகல் நேரங்களில் வண்டி நிற்குமிடங்களில் பிரயாணிகள் இறங்கி சீன நாட்டைச் சுற்றிப் பார்க்கலாம்!

- ஆர். ஆர். பூபதி

1000/- ரூபாய் பரிசு!

இந்த மாதப் போட்டி



இந்த மாதப் போட்டிக்கு நீங்கள் தயாரா? நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

- இங்கு கொடுக்கப்பட்டுள்ள ஆறு கேள்விகளுக்கும் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து எழுத வேண்டும்.
- பெற்றோர் கையொப்பம் இருக்க வேண்டும்.
- முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட்டு, அனுப்பி வையுங்கள்.

மொத்தப் பரிசு ரூ.**1000/-**

சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

ஒவ்வொருவருக்கும் ரூ.**200/-** பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி: **20.12.2004**

ஜோர்டான்

1. தலைநகரம் ________
2. மொழி ________
3. முக்கிய இடங்கள் ________, ________
4. கரன்ஸி ________
5. ஜோர்டானுக்கு அருகில் உயிரினங்கள் வாழ முடியாத ________ என்ற பெரிய ஏரி உண்டு.
6. இது எந்த நாட்டுக் கொடி?



ஆசிரியர்
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

பங்கு

கதை: பி. ஜெயந்தி ஜமுனா
எட்டாம் வகுப்பு, மாரியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பொள்ளாச்சி
படம்: பிள்ளை


வேல்


வீடு


தீன்


மீன்


வண்ணத்துப் பூச்சி


வால்

 சாமி  டில்   என்ற 2  கள் வசித்து வந்தன.  க்கும்  கும் அடிக்கடி சண்டை வந்து கொண்டே இருக்கும்.

ஒருநாள்  னும்  னும் எதிரெதிரே பார்த்தபடி பேசிக் கொண்டிருந்தன. அப்போது  க்கும்  க்கும் அருகில் சிறிய  ஒன்று அமர்ந்தது.  ம்  ம் அந்த  யைப் பிடிக்க சண்டை போட்டுக் கொண்டன.


சண்டையின் முடிவில்  அந்த  யைப் பிடித்தது.  உடனே  யில் பங்கு கேட்டது. ஆனால்  உறுதியாக மறுத்துவிட்டது.

கோபம் கொண்ட ,  னின்  க் கடித்தது. வலி தாங்க முடியாத  'ஆ' எனக் கத்தியது.  வாயிலிருந்து  பறந்து சென்றது.

 க்கும்  க்கும் தங்கள் தவறு புரிந்தது.

சுவடியில்

நெட் பிட்ஸ்



மேஜிக் நிபுணர் நிகழ்ச்சி நடத்திக் கொண்டு இருந்தார். ஒரு கண்ணாடி டம்ளர். அதனை ஆறு அடி உயரத்திலிருந்து கீழே போட்டார். கீழே விழுந்த இடத்தில் பஞ்சு பரப்பி வைக்கப்பட்டிருந்த தால், கண்ணாடி டம்ளர் உடைய வில்லை என்பது மட்டுமில்லை. அந்தக் கண்ணாடி டம்ளரிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர்கூட சிந்தவில்லை. இது எப்படி சாத்தியம்? (விடை: கடைசியில்)

இன்றைய தேதியில் உலகில் உள்ள மொழிகள் ஐயாயிரம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் பல நாடுகளில் பேசப்படும் ஒரே மொழியும், ஒரே நாட்டில் பேசப்படும் பல மொழிகளும் அடக்கம். இந்தியாவில், பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை சுமார் 850.

ஆங்கிலம்தான் மிக அதிக எண்ணிக்கையில் வார்த்தைகளைக் கொண்ட மொழி என்று கருதப்படுகிறது. ஆங்கிலத்தில் சுமார் எட்டு லட்சம் வார்த்தைகள் இருக்கின்றன. இவற்றில் சுமார் ஐந்து லட்சம் வார்த்தைகள் பொதுவானவை. மீதி மூன்று லட்சம் அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் சார்ந்தவை. மொழி இயல் நிபுணர்களின் ஆராய்ச்சிப்படி ஒரு மனிதன் தன் வாழ்நாளில் அதிகபட்சமாக 60 ஆயிரம் வார்த்தைகளையே பயன் படுத்துகிறான்.

உலகில் அதிக மக்கள் பேசும் மொழி எது என்று கேட்டால், உடனே உங்களிடமிருந்து 'ஆங்கிலம்' என்ற பதில் வரும். ஆனால் அது தவறு. 'மாண்டரின்' என அழைக்கப்படும் வட சீனமொழிதான் அதிக மக்கள் பேசுகிற மொழி. (சுமார் 80 கோடி பேர் என்கிறது ஒரு புள்ளி விவரம்).



வாழைப்பழம் மனிதர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான ஒன்றாக இன்று விளங்குகிறது. வாழைப் பழங்களில், ஒவ்வொரு நாட்டிலும் பல ரகங்கள் விளை

சந்தோஷம்!

விக்கப்படுகின்றன. உலகமெங்கும் சேர்த்து 4 கோடி டன் அளவுக்கு வாழைப் பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் ஒரு கோடி டன் அளவுக்கு உற்பத்தி செய்யும் நாடு இந்தியா! இரண்டாமிடம் உகாண்டாவுக்கு.

கொல்கத்தா நகரில் டாக்ஸியில் பயணம் செய்கிறபோது உங்களுக்கு ஒரு வித்தியாசமான அனுபவம் ஏற்படக்கூடும். டாக்ஸிகளில் புதிய கருவி ஒன்று பொருத்தப்பட்டிருக்கிறது. டாக்ஸியின் கதவுகளைத் திறந்த பத்தாவது விநாடியில் அந்தக் கருவி, 'பயணிகளே! நீங்கள் உங்கள் உடைமைகள் எல்லாவற்றையும் ஞாபகமாக எடுத்துக் கொண்டு விட்டீர்களா?' என்று நினைவூட்டும். அதன்பின் ஐந்து நிமிடத்துக்கு ஒரு தடவை இப்படி நினைவூட்டுதல் தொடருமாம். எண்ணூறு ரூபாய் விலையுள்ள இந்தப் புதிய கருவியைப் பொருத்தி இருப்பதற்கு கொல்கத்தாவாசிகள் மத்தியில் நல்ல வரவேற்பு. இதை எல்லா ஊர்களிலும் நடைமுறைப் படுத்தினால் என்ன?





ஒரு அண்ணனும் தம்பியும் தினமும் சண்டை போட்டுக் கொள்வது வழக்கம். சண்டை ஆரம்பித்தால், அது வாய் வார்த்தைகளை மீறி, சமையல் அறையிலிருந்து கண்டதையும் எடுத்து அண்ணன் மீது அடிக்க ஆரம்பித்து விடுவான் தம்பி.

பக்கத்து வீட்டுக்காரர், ''எதற்காக இப்படி தினமும் சண்டை போட்டுக் கொள்கிறீர்கள்? சமாதானமாய் இருக்கக் கூடாதா?'' என்று அறிவுரை சொல்ல, ''இப்படி அடித்துக் கொண்டு சண்டை போடுவதில்தான் எங்கள் இரண்டு பேருக்குமே சந்தோஷம்'' என்றான் தம்பி.


ஆலோசனை சொன்ன பக்கத்து வீட்டுக்காரருக்கு அதிர்ச்சியாகிவிட்டது.

''என்னது... அடித்துக் கொள்வதில் இரண்டு பேருக்குமே சந்தோஷமா?'' என்று கேட்டார்.


''ஆம்! அவன் பாத்திரங்களை என் மீது எறிவான். என் மீது பட்டால் அவனுக்குச் சந்தோஷம். குறி தவறி என் மீது படாவிட்டால் எனக்குச் சந்தோஷம்'' என்றான் அண்ணன்.

விடை: கண்ணாடி டம்ளரில் தண்ணீர் இல்லை. எனவே, டம்ளர் கீழே விழுந்தபோதிலும், ஒரு சொட்டுத் தண்ணீரும் சிந்தவில்லை.

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி


அம்மாவைத் தேடி...
கதை: வாண்டுமாமா படம்: மகேஷ்
திருட்டுப் பொருள்களுடன் ஒரு ஆள் இந்த பஸ்ஸில் பயணிப்பதாக தகவல் வந்தது. அவன் பெட்டி பஸ்ஸில்தான் இருக்கணும்.
2
அகிலா பயந்தது நடந்தே விட்டது.
ஐயோ!... சார்! அந்த ஆளோட சூட்கேஸுலே, என்னோட லட்டுவை ஒளிச்சு வைச்சு...
வ்வா..வ்!
திருடுபோன பொருள்கள் பெட்டியிலே...ம்... அந்த ஆளோட உதவியா நீ?
நான் இந்தப் பெண்ணைப் பார்த்ததே இல்லே. பாவம்! அவளைப் போக விடுங்க.
போலீஸ் வண்டி காவல் நிலையம் நோக்கி அவர்களுடன் விரைந்தது.
விசாரணைக்குப் பின் -
பயப்படாதே, அந்தத் திருடனோட கூட்டாளி என்று நாங்க நினைக்கலே. நீ யாருன்னு சொல்லு.



என் பேரு அகிலா சார். நான் என்னோட அம்மாவைத் தேடிட்டு போய்க் கிட்டிருந் தேன்!
ஓகே! உன் வார்த்தையை நம்பறேன்... நீ போகலாம்.
தப்பிச்சோம்டா லட்டு! என் அம்மா நிச்சயம் உயிரோடு இருக்காங்க. நாம் தேடக் கிளம்பணும்.
சார்! அகிலா என்ற பெண் அநாதை இல்லத்திலிருந்து ஓடிப் போய் விட்டதாகவும் தேடித் தரும்படியும் போன் வந்திச்சே!
ஆ...மா! அந்தப் பெண்ணை நைஸா மடக்கு. பீதிப்படுத்தாதே!
பாப்பா! ஒரு நிமிஷம்... ஒரு காபி சாப்பிட்டுவிட்டுப் போ! உன்னை சிரமப்படுத்திட்டோம்...
நன்றி! எனக்கும் தாகமாக இருக்கு.
தண்டபாணி சார்! உடனே ஸ்டேஷனுக்கு வாங்க. நீங்க தேடும் பெண்ணை நாங்க பிடிச்சுட்டோம்.
இப்பவே வரேன் சார்.



என் லக்! அகிலாவின் அம்மாதான் நடிகை வசந்தாங்கறது உறுதியாகி விட்டது. அகிலாவைக் கொண்டு போய் திருத்தி... வாவ்! பெரும் பொருள் பரிசாகக் கிடைக்கப் போகுது.
போலீஸ் காண்டீனில் -
லட்டு! இனி நாம் அந்தக் கோதண்டத்தைப் பத்திக் கவலையே பட வேண்டாம். நாம் எங்கே இருக்கோம்னு அவருக்குத் தெரியாது!
CANTEEN
உன்னை ஸ்டேஷனுக்குத் தவறுதலாகக் கூட்டி வந்துட்டோம் பாப்பா, மன்னிச்சிடு...
பரவாயில்லே சார்!
பிஸ்கட்டுக்கும் காபிக்கும் ரொம்ப நன்றி சார். நான் கிளம்பறேன்.
பாவம்! அநாதை இல்லத்திலிருந்து ஓடி வந்தது நமக்குத் தெரியாதுன்னு நினைச்சிட்டிருக்கு. அநாதை இல்லத்து நிர்வாகி கூட்டிட்டு போக வந்துட்டிருக்காருங்கறதும் தெரியாது!


நினைச்சா சங்கடமா இருக்கு. அப்பா, அம்மா யாருன்னு தெரியாத குழந்தைகளோட மனசைப் பத்தி நமக்கு என்ன தெரியும்? நாம நம் கடமையைச் செய்யறோம். அந்தப் பெண்ணைத் தப்ப விட முடியாதே.
இதேசமயம் காவல் நிலையத்தில்-
கோபால்! அநாதை இல்லத்து ஆள் வந்திருக்கார். அந்தப் பெண்ணை இங்கு கூட்டிவா!
மன்னிச்சுடு பாப்பா! உனக்காக - தண்டபாணிங்கறவரு ஆபீஸ்ல காத்திட்டிருக்கார்.
எ...ன்...ன?
இடிந்து போனாள் அகிலா.
தண்டபாணி இங்கே? நான் தொலைந்தேன்! என்னை மீண்டும் அநாதை இல்லத்தில் அடைத்து விடுவார். என் அம்மாவை என்னால் கண்டுபிடிக்கவே முடியாது...
எல்லா நம்பிக்கையும் போச்சு. நான் அநாதை இல்லத்திலிருந்து ஓடியது குற்றம் என்பார்கள். அந்த போட்டோவிலிருந்த பெண் என்னைப் போலிருந்ததினால் என் தாயார் என்று எண்ணி விட்டேன்.
(தொடரும்)


கோகுலம்
போஸ்டர்
AUSTRALIA
ஷேன் வார்ன்


கில்கிறிஸ்ட்
FILA

எலும்பு வங்கி

ஹலோ சுகமா?

● தி.சே.அறிவழகன், திருப்புலிவனம்

? தினமும் ஒரு கீரை சாப்பிட வேண்டும் என்று கூறுவது ஏன்? முருங்கைக் கீரையில் என்ன சத்து உள்ளது?


! கீரைகளில் நம் உடல் இயக்கத்திற்குத் தேவையான பல சத்துகள் உள்ளன. முக்கியமாக வைட்டமின் - ஏ. வைட்டமின் - சி. வைட்டமின் பி - காம்ப்ளக்ஸ் போன்ற வைட்டமின்களும் இரும்பு, கால்சியம், ஃபோலிக் அமிலம் போன்ற தாதுக்களும் ஏராளமாக உள்ளன. கீரைகளைப் பயறு வகைகளுடன் சேர்த்துச் சாப்பிடும்போது பயறுகளில் உள்ள புரதச் சத்தின் தரத்தை உயர்த்துகிறது. பச்சைக் கீரைகளில் கரோட்டின் நிரம்பியுள்ளதால் அவை கண் ஆரோக்கியத்திற்கு நல்லது. குழந்தைகளுக்கு எலும்பு, பல் மற்றும் ஈறுகள் வலுவாக வளர்வதற்குக் கீரைகள் உதவுகின்றன. கீரைகளில் இரும்புச்சத்து அதிகம் உள்ளதால் ரத்தசோகையைத் தடுக்கிறது. கீரையில் உள்ள நார்ச்சத்து உணவு எளிதில் செரிக்க உதவும். இதனால் நன்கு பசி எடுக்கும். மலச்சிக்கல் ஏற்படாது. நோய் எதிர்ப்பாற்றல் கிட்டும். உடலில் கொழுப்பு சேர்வது குறையும். குடல் புற்றுநோயைத் தடுக்கும். விலை உயர்ந்த காய்கறிகளில் கிடைப்பதைவிட பச்சைக்கீரைகளில் கிடைக்கும் சத்துகள் அதிகம். ஏழைகளின் வைட்டமின் வங்கி கீரைகள். ஆகவே தினமும் ஒரு கீரை சாப்பிடுங்கள்.

முருங்கைக்கீரையில் உள்ள சத்துகள்: வைட்டமின் - ஏ, 6780 மைக்ரோகிராம். வைட்டமின் - சி 200 மி.கி. இரும்புச்சத்து 440 மி.கி. கால்சியம் 440 மி.கி. இவை தவிர பாஸ்பரஸ் சத்தும் வைட்டமின் பி.காம்ப்ளக்ஸ் சத்தும் உள்ளன.

● தே. ஞானகுருசாமி, கருப்பட்டிப்புலம்

? குழந்தைகளுக்கு அடிக்கடி காதில் சீழ் வடிந்தால் என்ன விளைவு ஏற்படும் டாக்டர்?

! நடுக்காதில் தொற்றுக்கிருமிகள் பரவும்போது காதில் சீழ் சேரும். இதனால காதுவலி வரும். சீழ் அதிகமாக சேர்ந்து விட்டால் அங்குள்ள செவிப்பறையைத் துளைத்துக் கொண்டு சீழ் வெளியே வரும். சீழ் வெளியேறி விட்டால் காதுவலி குறைந்துவிடும். இதற்காக சிகிச்சை எடுக்காமல் இருக்கக் கூடாது. செவிப்பறையில் துளை விழுவதால் காது கேட்காமல் போகலாம். காதில் சீழ் வடிவது நீடித்தால்



சீழில் உள்ள தொற்றுக்கிருமிகள் மேஸ்டாய்டு எனும் கபால எலும்பைத் தாக்கும். அப்போது மூளைக்காய்ச்சல் உண்டாகும். இது உயிருக்கு ஆபத்தைத் தரக்கூடிய நோய். ஆகவே காதில் சீழ் வருமானால் ஆரம்ப நிலையிலேயே தகுந்த மருத்துவச் சிகிச்சைகளைப் பெற வேண்டியது அவசியம். நோய் முற்றி விட்டால் அறுவை சிகிச்சை தேவைப்படலாம்.

● லோ. வைத்யநாதன், விருதுநகர்

? எலும்பு வங்கி என்றால் என்ன டாக்டர்?

! மக்களின் ஆரோக்கியம் காப்பதற்கு நவீன மருத்துவத்துறையில் நாள்தோறும்

என்றால் என்ன?

புதிய கண்டுபிடிப்புகள் பல வந்து கொண்டிருக்கின்றன. அதில் ஒன்று 'எலும்பு வங்கி'. எலும்பு மருத்துவத்தில் இது ஒரு முக்கியத் திருப்புமுனையாகக் கருதப் படுகிறது. அண்மைக் காலமாக சாலைகளில் மக்கள் பெருக்கமும் வாகனப் பெருக்கமும் அதிகரித்து வருவதால் விபத்துகள் நிகழ்வதும் அதிகரிக்கின்றன. இதனால் எலும்பு முறிவுகள் ஏற்படுவது மிகச் சாதாரணமாகி விட்டது. அதுபோல் மாறி வரும் உணவுப் பழக்கங்களால் எலும்பு மெலிவு நோய்,



எலும்பு புற்றுநோய் போன்றவை ஏற்படுவதும் அதிகரித்துள்ளது. இம்மாதிரி நிலைமைகளில் பாதிக்கப்பட்ட எலும்பை அகற்றி விட்டுப் புதிய எலும்பைப் பொருத்த வேண்டியிருக்கிறது. இதற்கு இறந்தவர்களின் உடலிலிருந்து எலும்புகளைப் பெற்று நோயாளிகளுக்கு மாற்று எலும்பாகப் பயன்படுத்தினால் நல்ல பலன் கிடைக்கிறது. இறந்தவர்களின் எலும்புகளைப் பாதுகாத்துப் பயன்படுத்தும் வாய்ப்புகள் இதுவரை குறைவாக இருந்தன. இக்குறையை எலும்பு வங்கிகள் நீக்கியுள்ளன. இறந்தவரின் உடலை 6 மணி நேரத்திற்குள் பெற்றுத் தகுந்த கருவிகளின் உதவியுடன் -80 சென்டிகிரேடில் வைத்து இரண்டுஆண்டுகள் வரைப் பாதுகாக்க எலும்பு வங்கிகள் உதவுகின்றன. அதுவரை தேவைப்பட்ட எலும்பை தேவைப்பட்ட நேரத்தில் எடுத்து நோயாளிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். கண் வங்கி, ரத்தவங்கி வரிசையில் இப்போது எலும்பு வங்கியும் சேர்ந்துள்ளது.

புதிர் இங்கே! விடை கீழே!

1. சைவ உணவில் எந்தச் சத்து இல்லை?
   அ. வைட்டமின் பி-காம்ப்ளக்ஸ்
   ஆ. வைட்டமின் - ஈ
   இ. வைட்டமின் - பி12

2. வெறிநாய்க்கடிக்கான தடுப்பூசி தமிழகத்தில் எங்கு தயாரிக்கப்படுகிறது?
   அ. சென்னை
   ஆ. ஊட்டி
   இ. வேலூர்

3. ஆதாமின் ஆப்பிள் என்பது எது?
   அ. தைராய்டு சுரப்பி
   ஆ. தைராய்டு குருத்தெலும்பு
   இ. சுவாசமுன் குழல்

4. உணவு செரிமானத்தின்போது கொழுப்பு எதுவாக மாறுகிறது?
   அ. கொழுப்பு அமிலங்களாக
   ஆ. அமினோ அமிலங்களாக
   இ. லேக்டோஸாக

5. உணவை விழுங்கும்போது மூச்சுக் குழலுக்குள் உணவு செல்வதைத் தடுப்பது எது?
   அ. குரல்நாண்
   ஆ. குரல்வளை
   இ. குரல்வளை மூடி

விடைகள்!
1. இ 2. ஆ 3. ஆ 4. அ 5. இ

டாக்டர் கு. கணேசன்



புதையல்

8

இருட்டு என்றால் பயங்கர இருட்டு. உற்றுப் பார்த்தால் உள்ளங்கை கூடத் தெரியாத கும்மிருட்டு. அறையில் உடன் இருந்த நண்பர்கள் குடுமிநாதன், டில்லிபாபு இருவரையும் தன்னருகே வந்து நெருக்கமாக உட்காரச் சொன்னவன், இருட்டில் வேறு யாராவது ஒருவர் அங்கே தங்களைக் காவல் காப்பதன் பொருட்டு ஒளிந்திருப்பார்களோ என்று கொஞ்சம் சந்தேகப்பட்டான். யார் கண்டார்கள்? இருக்கலாம். தான் ஏதாவது பேசப் போய் அவர்கள் காதில் விழுந்து விட்டால் என்ன வேண்டுமானாலும் செய்து விடுவார்களே. இப்போதைக்கு, சின்னப் பசங்கள் தெரியாமல் வந்து மாட்டிக் கொண்டுவிட்டார்கள் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கே பொழுது விடிந்தால் என்ன தண்டனை தருவார்களோ! இந்த நிலையில் அவர்களது நடவடிக்கைகளைக் கண்காணிக்கத்தான் நாங்கள் வந்திருக்கிறோம் என்பதும் தெரிந்தால் வேறு வினையே வேண்டாம்!

இவ்வாறு தோன்றியதும் நண்பர்களிடம் தன் ரகசியத் திட்டத்தை காதோரம் விவரிக்கலாம் என்று முடிவு செய்ததை கைவிட்டான்.

நண்பர்களுக்கே கூடத் தெரியாமல்தான் தன் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று முடிவு செய்தான் பாலு.

''என்னடா விஷயம்? என்கிட்டே சொல்லு'' என்று கத்தினான் குடுமி.

'உஷ்' என்று அவனை அடக்கப் பார்த்தான் பாலு.

இனிமேல் யோசித்துக் கொண்டும் பேசிக் கொண்டும் இருப்பதில் பிரயோஜனமில்லை என்று முடிவு செய்தவனாக, திடீரென்று சம்பந்தமில்லாமல் குரல் எழுப்பி அழ ஆரம்பித்தான்.

'அம்மா... ஊ...ஆ...ஊ' என்று விதவிதமாகக் குரலில் ஏற்ற இறக்கங்களைக் காட்டி உரத்த குரலெடுத்து அழத் தொடங்கினான் பாலு.

''என்னடா! என்னாச்சுடா?'' என்று நண்பர்கள் இருவரும் பதறிக் கொண்டு அவன் அருகே நகர்ந்து வந்து உட்கார்ந்தார்கள்.

தன்னாலான அதிகபட்ச சத்தத்தை வெளியிட்டுக் கதறியழ ஆரம்பித்துவிட்டான். ஐந்து நிமிடங்கள் இப்படி தீவிரமாக அழ வேண்டியிருந்தது. திடீரென்று அந்த அறையின் வெளியே ஒரு சத்தம் கேட்டது. பூட்டு திறக்கும் ஓசை. பிறகு 'யார்றா அது?' என்றொரு கட்டைக்குரல்.

''சார்... எனக்கு பாத்ரூம் போவணும் சார்... ரொம்ப அர்ஜெண்டு.... முட்டிக்கிட்டு வருது. வலி தாங்க முடியலே'' என்று இன்னும் தீவிரமாகக் கத்தி அழ ஆரம்பித்தான் பாலு.

''பாத்ரூமெல்லாம் இங்க இல்லை. சும்மா கிட'' என்றான் வந்தவன்.

''சார், சார்... தாங்க முடியலை சார். சாயங்காலத்துலேருந்து ஒண்ணுக்கே போகலை சார். வலிக்குதே. அம்மா ஆ... ஆ'' என்று கதறி அழத் தொடங்கினான் பாலு.

''இன்னாடா இது உங்களோட பேஜாரா போச்சே'' என்று அலுத்துக் கொண்ட அந்தக் குண்டன், ''சரி, என்னோட வந்துத் தொலை'' என்று உத்தேசமாக பாலுவை நெருங்கி கையைப் பிடித்துக் கொண்டு திரும்பினான்.

சட்டென்று அழுகையை நிறுத்திய பாலு, ''இங்கயே இருங்கடா. நான் பாத்ரூம் போயிட்டு வந்துடறேன். என்னால தாங்க முடியலை. இதைக் கண்டிப்பா முதல்ல முடிச்சாகணும்'' என்று தன் நண்பர்களைப் பார்த்துக் குரல் கொடுத்தான். அந்த சமிக்ஞை அவர்களுக்குப் புரிந்தாக வேண்டுமே என்று மனதுக்குள் கடவுளை வேண்டிக் கொண்டான். குண்டன் கையைப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

மாடிப்படி இறங்கும்போது கொஞ்சம் வெளிச்சம் இருந்தது. கீழே சன்னலுக்கு வெளியே ஓரிரு மெழுகுவர்த்திகள் எரிந்து கொண்டிருந்ததையும் தாங்கள் வந்தபோது பார்த்த குண்டர் படையில் ஒரு சிலர் அங்கே நின்று கொண்டிருந்ததையும் அவன் கண்

தீவு

பா.ராகவன்

டான். எப்படியும் ரொம்ப தூரம் அழைத்துப் போக மாட்டார்கள். கட்டடத்துக்குப் பக்கத்திலேயே தான் போகச் சொல்லுவார்கள் என்று பாலு எதிர்பார்த்தான். வாகான ஒரு வாய்ப்பு கிட்டுமானால் மூச்சைப் பிடித்துக்கொண்டு தப்பித்து ஓடி விட வேண்டுமென்றும் எங்காவது பதுங்கி



யிருந்து அவர்களது நடவடிக்கைகளை கவனிக்க வேண்டும் என்பதும் அவனது திட்டம்.

மனதுக்குள் எல்லா தெய்வங்களையும் அவன் வேண்டிக் கொண்டான். அந்தக் குண்டன், தன் நண்பர்களிடம் "ஒண்ணுமில்லப்பா. இந்தப் பையனுக்கு பாத்ரூம் போவணுமாம்" என்று சொல்லியபடி, "டேய், அந்தா பாரு. அந்த மரத்தடில போய் போயிட்டு வா" என்று வாசலில் இருந்தபடியே அவன் கையை விடுவித்தான்.

"ரொம்ப தேங்ஸ் சார். இதோ வந்துடறேன்" என்றபடி பாலு சந்தோஷமாக நடக்க ஆரம்பித்தான். நடக்கும்போதே மனதுக்குள் ஒரு கணக்குப் போட்டான். அந்தப் பாழடைந்த கட்டடத்துக்கும் இடதுபக்கம் குண்டன் சுட்டிக் காட்டிய மரத்தடிக்கும் இடையே பத்துமீட்டர் இடைவெளியாவது அவசியம் இருக்கும். அந்த மரம்தான் ஆரம்பம். அங்கிருந்து வரிசையாகப் பல மரங்கள் இருந்தன. சுற்றிலுமே மரங்கள்தான். இருளில் எல்லா மரங்களும் மலை மாதிரி கவிந்து நிற்பது போல் பட்டது அவனுக்கு. ஒரு மரத்தின் பின்னால் போய் ஓட ஆரம்பித்தால் எப்படியும் தப்பி விடலாம் என்று அவனுக்குத் தோன்றியது. ஓடுவதென்றால் எங்கே ஓடுவது? கடற்கரைக்குத்தான் ஓட வேண்டும். எப்படியும் மாட்டிக் கொள்ளப் போவது உறுதி. அதற்குள் படகு எந்தப் பக்கம் வரும். அதில் என்ன ஏற்றுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். அதைவிட முக்கியம், புதையலை எங்கிருந்து தோண்டி எடுக்கிறார்கள் என்று பார்க்க வேண்டியது. இதையெல்லாம் பார்த்து விட்டபிறகு மாட்டிக்கொண்டால் நல்லது.

என்ன செய்யலாம்? அவன் மனதுக்குள் வேகவேகமாகக் கணக்குப் போட்டான். எப்படியும் மணி பதினொன்றே முக்கால் இருக்கும். இன்னும் கால்மணி நேரத்தைக் கடத்த வேண்டும். பன்னிரண்டு மணிக்குப் படகு வரும் என்பதாகத்தானே பேசிக் கொண்டார்கள்? அந்தநேரம் எல்லாருமே பிஸியாகி விடுவார்கள்.

ஆகவே, "சார், எனக்குத் தனியா போக பயமா இருக்கு. நீங்ககூட வர்றீங்களா?" என்று தன்னை அழைத்து வந்த குண்டனிடம் கேட்டான். தன்மீது துளி சந்தேகமும் வராமலிருக்க இது உதவும் என்று அவனுக்குத் தோன்றியது.

"அட பயமாயில்லே?" என்று சுற்றியிருந்தவர்கள் எகத்தாளமாகச் சிரித்தார்கள். "நீ போ தம்பி. நாங்க இங்கதான் இருக்கோம். பயப்படாத. இந்தக் காட்டுல எங்களை மீறி உன்னை யாரும் எதுவும் செய்துட முடியாது" என்று நம்பிக்கை சொன்னான் ஒருவன்.

"சரிங்க" என்று பவ்யமாக பதில் சொல்லிவிட்டு மெதுவாக நடக்க ஆரம்பித்தான் பாலு. அவனது நல்லநேரம் அவன் இரண்டடி எடுத்து வைப்பதற்குள் எதிர் திசையிலிருந்து வேகமாக ஓடிவந்த இன்னொரு புதிய குண்டன், "போட் வந்துடிச்சி, போட் வந்துடிச்சி" என்று கத்தியபடியே வந்தான்.

ஆஹா! என்று மனதுக்குள் சந்தோஷப்பட்டுக் கொண்ட பாலு சட்டென்று நின்று திரும்பிப் பார்த்தான். அவர்கள் இப்போது பாலுவைக் கவனிப்பதை விட்டுவிட்டு புதிய குண்டனிடம் பேச ஆரம்பித்தார்கள்.


"எங்க நிக்குதுடா?" என்றான் தலைவன் போலிருந்த ஒருவன்.

"வழக்கமா நிக்கற இடம்தான். கொஞ்சம் சீக்கிரம் முடியணும்னு சொன்னாங்க" என்றான் அவன்.

"சரி, இதோ" என்றவன் திரும்பி, தன் நண்பர்களைப் பார்த்தான். அவர்கள் உடனே புறப்பட்டு, அந்தக் கட்டடத்தின் பின்புறமாக

ஓவியப் போட்டி

ஜனவரியில் பொங்கல் திருநாள் வருகிறது. இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு **'பொங்கல்'**. உங்கள் கற்பனைக் கேற்றவாறு பொங்கல் காட்சிகளை வண்ணத்தில் ஓவியம் தீட்டி அனுப்பி வையுங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முழு முகவரியைக் குறிப்பிடவும். கடைசித் தேதி: **8.12.2004.**



நடக்க ஆரம்பித்தார்கள். பாலுவுக்கு நம்பவே முடியவில்லை. தன்னையோ, தன்னிரு நண்பர்களையோ சுத்தமாக மறந்துவிட்டு அத்தனை பேரும் இப்படி புறப்படுகிறார்களே என்று அவனுக்கு வியப்பாக இருந்தது. எல்லாம் நல்லதுக்கே என்று நினைத்துக் கொண்டவனாக தடதடவென்று அந்தக் கட்டடத்தின் வலப்புறமாகத் திரும்பி தானும் அவர்கள் ஓடும் திசைக்கு எதிராக ஓட ஆரம்பித்தான். பத்தடி போனவன் சட்டென்று தாமதித்தான். கட்டடத்தில்தான் இப்போது யாருமில்லையே? போய்த் தன் நண்பர்களையும் உடன் அழைத்துக் கொண்டு வந்தால் என்ன என்று தோன்றியது. வேண்டாம் விபரீதம் என்று உள்ளுணர்வு எச்சரித்தது. தயங்கித் தயங்கி அவர்கள் போன திசையைக் குறி வைத்து அவன் மட்டும் முன்னேற ஆரம்பித்தான்.

அந்தக் குளிர் இரவிலும் அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. நாக்கு வறண்டு, தாகம் எடுத்தது. 'கடவுளே, காப்பாத்து' என்று வேண்டியபடி மூச்சைப் பிடித்துக்கொண்டு ஓட ஆரம்பித்தான். பத்து நிமிடங்கள் ஓடிக் களைத்தபின், நூறடி தூரத்தில் அவர்கள் அனைவரும் ஓர் அடர்ந்த புதரின் மறைவிலிருந்து எதையோ வெளியே எடுக்க முயற்சி செய்வதை ஒளிந்திருந்து பார்த்தான்.

என்ன அது? தெரிந்து கொள்ளும் ஆவல் இவனுக்குக் கட்டுக்கடங்காமல் போனது. சே, இந்த இருட்டு இப்படியா சதி செய்ய வேண்டும்?

சில நிமிட முயற்சிக்குப் பின் அவர்கள் வெளியே இழுக்க முயற்சி செய்த உருவங்கள் ஒவ்வொன்றும் வரிசையாக வெளியே வருவதையும் பார்த்தான். ஒவ்வொன்றும் ஒரு பூதம் மாதிரி பெரிதாக இருக்கும் என்று தோன்றியது. நான்கு பேர் சேர்ந்துதான் ஒரு பொருளைக் கட்டி இழுத்தார்கள். பிறகு கடற்கரையை நோக்கிச் செல்லும் திசையில் அதை உருட்டிக் கொண்டு போக ஆரம்பித்தார்கள். பாலு இன்னும் முன்னால் போய் தெளிவாகப் பார்க்க முடிகிறதா என்று பார்த்தான். ம்ஹூம். வேறு வழியே இல்லை. உயிரைப் பணயம் வைத்து, அவர்களுக்கு எதிரே போய் நின்றுதான் அது என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது. தான் கொஞ்சம் ஒல்லிப் பையனாக இருந்திருக்கலாம். ஓடுவதற்கும் ஒளிவதற்கும் சௌகரியமாக இருந்திருக்கும். இப்படியொரு குண்டனாக வளர்ந்து விட்டோமே என்று முதல்முறையாகக் கவலைப்பட்டான்.



ஆமை காலண்டர்

பாபுவ நியூகினியா நாட்டு மக்களுக்கு காலண்டர் முறை தெரியாது. ஒவ்வொரு கிறிஸ்துமஸ் சமயமும் கடற்கரை ஓரங்களுக்கு முட்டையிடுவதற்காக ஆமைகள் வரும். இதை வைத்து தங்கள் வயதைக் கணக்கிடுகின்றனர்.

- நெ. இராமன்

ஆனாலும் மன உறுதியை விட்டுவிடாமல் வேக வேகமாக நடக்க ஆரம்பித்தான்.

அவனது இலக்கு இப்போது அவனுக்குத் துல்லியமாக இருந்தது. நூறடி இடைவெளி இருக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் போகும் பாதைக்குச் சமமாகவே பக்கவாட்டில் நடந்து கடற்கரை வெளியை அடைந்துவிட வேண்டும். மணல்வெளியில் பதுங்கவெல்லாம் முடியாது. அங்கே பார்த்துவிடுவார்கள். அதற்குள் அவர்களை நெருங்கி, இழுத்துப் போகப்படும் பொருள் என்னவென்பதைப் பார்த்துவிட வேண்டும்.

மூச்சைப் பிடித்துக் கொண்டு அவன் பதுங்கி நடந்தான். ஏழு நிமிடங்களில் கடற்கரை வந்துவிட்டது. பக்கவாட்டில் அவர்களும் அந்தப் பொருள்களை உருட்டிக் கொண்டு வருவது தெரிந்தது. கிட்டே போகலாமா என்று யோசித்தான். சட்டென்று வேறொரு யோசனை வந்தது. எதற்குக் கிட்டே போய் மாட்டிக் கொள்ள வேண்டும்? மாறாக, அதோ தூரத்தில் கரையோரம் தெரியும் படகின் அருகே போய் பதுங்கிக் கொண்டுவிட்டால் பார்ப்பது சுலபமாயிற்றே!

இப்படி தோன்றியதுமே பாலு கடலோரத்தில் நின்றுகொண்டிருந்த படகை நோக்கி ஓட ஆரம்பித்தான்.

(தொடரும்)

வெந்நீர் ஊற்றுகள்!

பூமிப் பந்தின் அழகே அலாதியானது; அற்புதமானது! பூமியின் ஓட்டுக்குள்ளே கொந்தளிக்கும் நெருப்புக் குழம்பைக் கொண்ட எரிமலைகளும் உள்ளன. அவை சமயத்தில் வெடித்துச் சிதறி நெருப்புக் கோளங்களை, கற்களை, தூசுகளை, புகையை வீசியடிக்கின்றன. குமுறும் எரிமலைகள் அவற்றின் இயல்புக்கு ஏற்ப பலவகை உள்ளன.


ஆதிகால மனிதன், பூமியின் பல்வேறு இடங்களிலிருந்து மலைகளில், நிலத் தளங்களில், கடல் நீருக்குள் தீப்பிழம்புகள் வருவதைப் பார்த்தான். ஆனால் நிலத்தின் கீழே வாழும் கொடிய விலங்குகளில் இதுவும் ஒன்று என கருதினான். மேலும் இவை இறந்த மக்களின் ஆன்மாக்களுக்குச் சொந்தமானவை என்றும் பூமிக்குக் கீழே, அவர்களுக்கான 'இறந்தவர்களின் பேரரசு' இருப்பதாக நம்பினான். ஹீப்ரு, கிறிஸ்தவ இனத்தவர்கள், பூமிக்குக் கீழே உள்ள உலகத்தை, வாழ்நாளில் பாவம் செய்தவர்கள், இறந்தபின் சென்று தண்டனை அனுபவிக்கும் 'நரகம்' என அழைத்தனர். இது 'பாதாள உலகம்' என்றும் கூட பெயரிடப்பட்டது. இதை ஆட்சி செய்பவரை ரோமானியர்கள் 'புளூட்டோ' என்றும் கிரேக்கர்கள் 'ஹேட்ஸ்' என்றும் அழைத்தனர். சிசிலி, லிபர்க் தீவுகளில் எரிமலை வெடிப்பதை கண்ணுற்ற ரோமானியர்கள் இவற்றை நெருப்புக் கடவுளான வல்கனின் உலைக்களத்துடன் இணைக்கப்பட்ட குழாய்கள் என்றே கருதினர். இவை பேரழிவை உண்டு பண்ணுவதால், இதிலிருந்து காப்பாற்றப்பட, நகரத்தின் எல்லைப் பகுதிகளில் நெருப்புக் கடவுளுக்கு பல கோயில்களை நிறுவினர். உருகிய பாறைக் குழம்புடன், பாறைத் துகள்கள், நெருப்பு, புகையைக் கக்குவதால் இம் மலைகள் 'எரிமலைகள்' என்றே வழங்கப்பட்டன.



பூமி ஓட்டுக்குக் கீழே செல்லச் செல்ல வெப்பம் அதிகரிக்கும்; 33 மீட்டர் ஆழம் சென்றால் 1°c வெப்பம் உயரும். சுமார் 40 கி.மீ ஆழத்திற்குச் செல்ல நேரிட்டால், அங்கு வெப்பம் 1200°c ஆக இருக்கும். அந் நிலையில் பாறைகள் உருகிய நிலையில் இருக்கும். பாறை உருகி அதிக அழுத்தத்தில், பூமி ஓட்டுக்கு வெளியே வீசி எறிவதை மனிதனால் கட்டுப்படுத்த முடியாது.

இந்த எரிமலைகள் இயங்கும் நிலையைப் பார்த்து அவை, எழுச்சி எரிமலை (Active valcano),







இறந்த எரிமலை (Extinct valcano), தொன்மை எரிமலை (Ancient valcano) என பிரிக்கப்படுகிறது. தொன்மை எரிமலைக் கூட்டங்கள், உலகின் பல பகுதிகளிலும் எல்லாக் கண்டங்களிலும் சிதறிக் கிடக்கின்றன. இவற்றில் எழுச்சி எரிமலைகளில் 75 சதம் பசிபிக் பெருங்கடலுக்குள்ளே காணப்படுகின்றன. சில எரிமலைகள், இமய மலையைவிட உயரமானவை; 30,000 அடி உயரம் உள்ளவை. இவை இன்னும் உயிருடன் கங்குகளைக் கக்கிக் கொண்டிருக்கின்றன. அப் பகுதிக்கே 'நெருப்பு வளையம்' என்று பெயர். இறந்த எரிமலைகளிலிருந்தும் கூட, இன்னும் கந்தக, கார்பானிக் வாயுக்களும், ஹைட்ரோ கார்பன்களும், நீராவியுடன் கூடிய வெந்நீரும் வெளியேறிக் கொண்டிருக்கின்றன. ஜெர்மனியின் கிசிங்கன், ஃபிரான்சின் அவுர்ஜின், அமெரிக்காவிலுள்ள மஞ்சள் பாறை தேசிய பூங்கா, ஐஸ்லாந்து, நியூசிலாந்து போன்றவை பிரபலமானவை. பனிக்கட்டிகள் நிரம்பிய ஐஸ்லாந்தில் வெந்நீர் ஊற்றுகள் மிகவும் ஆச்சர்யமானவை!

அமெரிக்க ஐக்கிய குடியரசில் உள்ள 'மஞ்சள் பாறை தேசியப் பூங்கா' இயற்கையில் உண்டானதும், மிகப் பழமையானதும்கூட. இது தனிச் சிறப்பு வாய்ந்தது. அருகிலுள்ள காட்டையும் விலங்குகளையும் எரிமலைக் குழம்பு 15 முறை மூடிவிட்டது. பல மரங்கள் நின்ற நிலையிலேயே கல்லாக மாறி விட்டன. இங்கு அளவற்ற வெந்நீர் ஊற்றுகள் காணப்படுகின்றன. இந்த வெந்நீர் ஊற்றுகள் எரிமலைகள் இருந்த இடங்களில் மட்டுமே காணப்படுகின்றன. சில ஊற்றுகள் 10 - 20 நிமிட இடைவெளியில் பீறிட்டு எழுகின்றன; சில ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை வெளிவந்து வேடிக்கை காட்டுகின்றன. வெந்நீர் பீறிட்டு எழுமுன், நிலப் பரப்பின் கீழே அதிர்ச்சி அலைகள் காணப்படும். குழிவான பள்ளத்தில் நீர் தேக்கப்பட்டு, பின் கொதிக்கத் துவங்கி, பீறிட்டு வீசி எறியப்பட்டு, குறிப்பிட்ட கால அளவில் வீச்சு அடங்குகிறது. நீரின் வெப்பநிலை 60°c - 140°c வரை இருக்கும். இடி முழக்க ஓசையுடன் வெளிப்படும் நீரூற்றுகள், வெண்மையான மேகக் கூட்டம் போல் நெஞ்சைக் கவருகின்றன. இவை 69 மீட்டர் உயரம்கூட எழும்புகின்றன. நீர் வெளியேறும்போது சீரற்ற கூம்பிய மேடுகளையும் குழிவையும் உண்டாக்குகின்றன.



ஐஸ்லாந்திலுள்ள பெரிய வெந்நீர் ஊற்று ஒன்று 24 -30 மணி நேர இடைவெளியில் வந்து நடனமிடுகிறது.



மோகனா

கடிதங்கள்

ஆரம்பமே அட்டகாசம்!



✉ கோகுலத்தைப் படித்தேன். இந்த மாதம் கோகுலம் 'தீபாவளி' ஸ்பெஷலாக வெளிவந்திருப்பது, சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்குச் சந்தோஷமாக இருக்கும் வகையில் அமைந்தது. 'தீபாவளித் திருநாள்' எனும் தலைப்பில் பிற நாட்டில் வாழும் இந்தியர்கள் எப்படி தீபாவளியைக் கொண்டாடுகின்றனர் எனத் தெரிந்து கொள்ள வழி வகுத்தது. கோகுலம் கதைகள், பொது அறிவு, புதிர்கள் போன்றவற்றை வெளியிட்டு சிறுவர்களை சிந்திக்க வைக்கிறது.

- பெ. கோபிசிவராமன், கீழ்க்கொடுங்காலூர்

✉ 'வாண்டுமாமா'வின் 'அம்மாவைத் தேடி' - சித்திரத் தொடர் ஆரம்பமே அட்டகாசம். கோகுலம் வெளி வரத் துவங்கு முன்பே சின்ன வயதில் 'கல்கி'யில் வெளியான 'மூன்று மந்திரவாதிகள்' சித்திரத் தொடர்கதையும், அதில் வரும் குட்டையன், நெட்டையன், பொட்டையன் பாத்திரங்களும், 'புவனா புவனா பறந்து வா என் உதவிக்கு' என்ற வாக்கியமும் இன்னமும் நெஞ்சை விட்டு அகலவில்லை. வாண்டுமாமாவின் அற்புதப் படைப்பு அது. அதேபோல் கௌசிகனாய் அவர் எழுதிய 'சுழிக்காற்றும்' மறக்க முடியாத மர்மநாவல். மூன்று மந்திரவாதிகளின் சுவையும், சுழிக்காற்றின் மர்மமும் கலந்து 'அம்மாவைத் தேடி' அமையும் என ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

- வி. கல்யாணி, திருநெல்வேலி

✉ 'தன்னைத்தான் எல்லோரும் மதிக்க வேண்டும். மற்றவர்களை மதிக்கக் கூடாது' என்று ஆணவம் பிடித்தவர்களுக்குச் சாட்டையடி + அறிவுரை வழங்கினார் 'எல்லாமே அழகு' முனிவர். தம்பி குட்டியப்பனின் புத்தி கூர்மை பலரைக் காப்பாற்றியது மட்டுமின்றி சொத்து ஆசை பிடித்த முத்தப்பனின் மனதையும் மாற்றியது.


- எம்.எஸ். சுலோசனா, மன்னார்குடி

✉ ஆந்தையை மற்ற பறவை இனங்கள் கேலி செய்தபோதிலும், அதை மனதில் கொள்ளாமல், பாம்பிடமிருந்து பறவைகளைக் காப்பாற்ற ஆந்தையார் செய்த தந்திரம் மிகவும் அபாரம்! பேராசை பெரு நஷ்டம் என்பதற்கு பண ஆசை பிடித்த முத்தப்பன் ஒரு தக்க சான்று என்று சொல்லலாம். கொக்குகளின் மாநாடு, பள்ளி மாணவர்களின் வண்ணத் தூரிகையில் முதல் பரிசு பெற்ற படம் மிகவும் இயற்கையாக இருந்தது.

- சாத்தூர் எம். செல்லையா

✉ 'தீபாவளிக்கு வந்த கரடியார்' கவிதையைப் படித்து 'வெடி'ச் சிரிப்பாய் சிரித்தேன். உள்ளுக்குள் ஜாங்கிரி சாப்பிட்டது போலிருந்தது. 'நீரில் குதித்த கண்ணபுரத்தாள்' வரலாற்றுக் கதையில் அக்ரூரை, ஆண்டாளை, அகலிகையை, சபரியை என்று அடுக்கி விட்டு ஆண்டவன் நம்பிக்கையில் ஆற்றில் குதித்த கண்ணபுரத்தாளின் நம்பிக்கைத் தியாகம் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது நெஞ்சில்! கண்களோ கண்ணபுரத்தாளை எண்ணிப் பணிகின்றன!

- ஆர்.ஜி. காயத்ரி, திசையன்விளை



மருந்தே உணவா?

எங்கள் எண்ணங்கள்...


மருத்துவரின் சரியான ஆலோசனை இல்லாமல், சிலர் அந்த நேரத்தில் மட்டும் நோய் நீங்கினால் போதும் என்று தமக்குத் தாமே மருந்துகளை எடுத்துக் கொள்கின்றனர். இது தவறான பழக்கமாகும்.

கிராமங்களில் படிக்காத பாமரர்கள் இவ்வாறு தமக்குத் தாமே, அருகிலுள்ள மருந்துக் கடைகளில் மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் மருந்துகளை வாங்கி உண்கிறார்கள் என்று நினைத்தால், பல படித்த பாமரர்களும் அவ்வாறே செய்கின்றனர்.

மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் நமக்கு நாமே மருந்துகளை எடுத்துக் கொள்வதால், அந் நோய் நீங்காததோடு பல புதிய நோய்களும் ஏற்படுகின்றன.

எனவே, மருத்துவரிடம் சென்று சரியான சிகிச்சை மேற்கொண்டு அதன்படி மருந்துகளைச் சாப்பிடுவதே சாலச் சிறந்தது.

- ரவிவர்மன், திருச்சி



என்னைப் பொறுத்தவரை பொதுவாகவே மாத்திரை மருந்துகளைத் தவிர்ப்பது நல்லது. இயற்கையாகவே உடம்புக்கு ஓரளவு நோய் எதிர்ப்பு சக்தியும் தானாகவே தன்னைச் சரிப்படுத்திக் கொள்ளும் யுக்தியும் உண்டு. சில சமயம் நல்லுணர்வும், சில சமயம் உணவுக் கட்டுப்பாடும், சில சமயம் ஓய்வும், சில சமயம் உடற்பயிற்சியும்கூட அவற்றுக்கு உதவும். அதனால்தான் உண்ணாநோன்பு நல்ல மருந்து என்ற பழமொழியும், 'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்' என்ற திருக்குறளும் பிறந்தது. ஆனால் இன்றைய இயந்திர உலகில் வெகுநாட்கள் ஒரு நோயோடு போராட இயலாது. எனவே அத்தகைய சமயங்களில் மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்து எடுத்துக் கொள்வது நல்லது. அதை விடுத்து மாத்திரையா? மாற்று இரையா? எனச் சந்தேகிக்கும் வகையில் இஷ்டம் போல் அடிக்கடி மாத்திரை எடுத்துக் கொள்வது, இன்று உடனடி நிவாரணம் தந்தாலும் பின்னாளில் பக்க விளைவுகளாலும் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவதாலும் நம்மைப் பாடாய்ப்படுத்தி எடுக்கும்.

- வி. கல்யாணி, திருநெல்வேலி


ப்ரியா சொல்வது போல எதற்கெடுத்தாலும் நாமே கடையில் சென்று மாத்திரையை வாங்கிப் போட்டுக் கொள்ளக் கூடாது. உதாரணத்துக்குத் தலைவலி என்று வந்தால் அதற்கான காரணங்கள் நிறைய இருக்கும். மலச் சிக்கல் இருந்தாலும் தலைவலி வரும். மன உளைச்சல், பனி, மழை சேராமலிருப்பது... இப்படி ஏகப்பட்ட காரணங்கள் உண்டு. இப்படி எதற்கெடுத்தாலும் மாத்திரையைச் சாப்பிட்டு வந்தால், கொஞ்சம் கொஞ்சமாக உள் உறுப்புகளைப் பின்னாளில் பாதித்துவிடக் கூடிய அபாயமும் ஏற்படும். எனவே டாக்டரிடம் போய்க் காண்பித்து, அவர் ஆலோசனைப்படிதான் மாத்திரை சாப்பிட வேண்டும்.

- ஆர். அம்பிகா, மதுரை

இரக்கம்

கதை: ராஜி ராதா
படம்: பிள்ளை




எஜமானே, சுமையைக் குறையுங்கள். என்னால் முடியவே இல்லை. சாப்பாடும் குறைவாகத் தர்றீங்க.
நீ செய்யற வேலைக்கு இந்தச் சாப்பாடு போதும்.
அன்று மாலை சினி முருகனிடமிருந்து தப்பி ஓடியது.
இதை அறிந்த மினி -
ஆஹா இனி நான்தான் ராஜா. எஜமான் என்னை நல்லா வச்சுப்பார்.
மறுநாள் -
எஜமானே, சுமை ரொம்ப அதிகமா ஏற்றிட்டீங்க. குறையுங்கள்.
சினி ஓடிருச்சு. இருக்கிற வேலையை நீதானே செய்யணும்... ம்... கிளம்பு!
சே! சினிக்கு இரக்கப்பட்டு, நடந்திருந்தால் எனக்கு இந்தக் கதி வந்திருக்காதே!



நினைவில் நின்றவை...

நல்லதைப் பார்த்தால் பயம்!



மாத்திரை

இரண்டாம் வகுப்பு முடித்துவிட்டு மூன்றாம் வகுப்புக்குச் சென்ற புதிதில் நவீனாவுக்குக் கடுமையானக் காய்ச்சல் வந்தது. மருத்துவரிடம் காட்டி சிகிச்சை பெற்று மருந்து மாத்திரைகளுடன் வீடு வந்து சேர்ந்தோம். மாலை நேர சிற்றுண்டிக்குப் பின் கண்டிப்பாக மாத்திரை உட்கொள்ள வேண்டுமென மருத்துவர் அறிவுறுத்த அதன்படி இரண்டு ½ மாத்திரைகளை அளித்தோம்.


இரண்டையும் பெற்றுக் கொண்ட அவள் அதை ¼ பங்காக ஒடித்து 4 சம பங்குகளாக மாற்றினாள். ஒன்றை அவளது தந்தையிடமும் மற்றொன்றை என்னிடமும், இன்னொன்றை அவளது தங்கையிடமும் கொடுத்துவிட்டு மீதமுள்ள ¼ மாத்திரையை அவள் கையில் வைத்துக் கொண்டே ''பகுத்துண்டு சாப்பிடச் சொல்லியிருக்காங்க'' என்றாளே பார்க்கலாம்!

- எம். கலைச்செல்வி,
இராசபாளையம்

ஆயிரம் கைகள்!

ஒருநாள் காலை பரபரப்பான நேரம். என் அப்பா ஒரு பக்கம் ''டிபன் ரெடியா? கட்டிக் கொண்டு போகின்ற சாப்பாடு எங்கே?'' என்கிறார். அப்பா காலை ஏழு மணிக்கு அலுவலகம் போய்விடுவார். நானோ அம்மாவிடம் பால் கேட்டேன். என் தங்கையோ, ''அம்மா குளிக்க வெந்நீர் கொண்டு வாருங்கள்'' என்றாள். என் அம்மா உடனே, ''எனக்கு என்ன ஆயிரம் கைகளா இருக்கிறது? எல்லா வேலையையும் ஒரே நேரத்தில் பார்க்க'' என்றார். உடனே என் தங்கை ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்றால் அம்மா தெய்வம்தானே? அப்படியென்றால் ஆயிரம் கை இருக்க வேண்டுமே'' என்றாள். அதைக் கேட்டவுடன், அந்த டென்ஷனிலும், நாங்கள் எல்லோரும் அடக்க மாட்டாமல் சிரித்து விட்டோம்.

- சூ. ஹரீஷ்,
நாகர்கோவில்



அன்பில் கரைந்தேன்!

சமீபத்தில் என் அக்காவிற்கு கல்லூரியில் ஒரு சர்வே (முதியோர் பற்றி) எடுக்கச் சொல்லியிருந்தனர். அக்கா என்னையும் அழைத்துச் சென்றிருந்தாள் முதியோர் காப்பகத்திற்கு. காப்பகத்தில் உள்ள வயதானவர்களின் அபிலாஷைகளை அங்கே அறிந்து கொள்ள முடிந்தது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான ஆசைகள், ஏக்கங்கள், வருத்தங்கள். அக்கா என்னைத் துணைக்கு அழைத்தபோது நான் விளையாடுகிற



ஆர்வத்தில் செல்ல விருப்பமில்லாமல் சாக்லேட் ஆசையில்தான் கிளம்பினேன். ஆனால் சென்றபிறகு அங்கே உள்ள பெரியவர்கள் என் மீது காட்டிய அன்பில் கரைந்து போனேன். வாழ்வின் இன்னொரு பக்கத்தையும் அறிந்து கொள்ள முடிந்தது. அங்கு வந்திருந்தவர்களில் முக்கால்வாசிப் பேர் பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்டவர்களே! ஒரு கவலையுமின்றி நாங்கள் வளர பெற்றோர் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். நான் பெரியவனாய் வளர்ந்த பிறகு என் பெற்றோரை நன்கு கவனிப்பேன்.

- எஸ். டேனியல்
லியோபிரபு, மதுரை

பயம்!

எங்கள் ஊர்ப்பக்கம் நாகப்பாம்பை எல்லோரும் 'நல்லது' என்பார்கள். ஒருமுறை அத்தை ஊரிலிருந்து வந்திருந்தபோது, அனைவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அப்போது திடீரென எங்கிருந்தோ பாம்பு வாசற்படியருகே வந்து விட்டது. ஒருவழியாய் அதை விரட்டி விட்டு பேச்சைத் தொடங்கும் போது அத்தை ''இப்படித்தான் போன வாரம் எங்க வீட்டுக்கு 'நல்லது' வந்து விட்டது! எல்லோருக்கும் பயமா போயிருச்சி!'' என்று சொன்னார். அருகில் இருந்த தம்பி ''நல்லது வந்தால் சந்தோஷப்படாமல் ஏன் பயந்தீங்க அத்தை?'' எனக் கேட்டான் அப்பாவியாய்! இதைக் கேட்டு அனைவருக்கும் சிரித்து சிரித்து வயிறு புண்ணாகியது.

- ப. காளிதாசன், நீர்விளங்குளம்


பிரசன்ட் மிஸ்

நான் படித்தது இரு பாலரும் சேர்ந்து



படிக்கும் பள்ளி. அன்று சாப்பாட்டு இடைவேளைக்குப் பின் மதியம் கணித ஆசிரியர் எங்கள் வகுப்புக்கு வந்து, எங்களை எல்லாம் கணக்குப்போடச் சொல்லிவிட்டு அவர் தேர்வுத்தாளைத் திருத்திக் கொண்டிருந்தார். நாங்கள் எல்லோரும் அவர் கொடுத்த கணக்குகளைப் போட்டுக் கொண்டிருந்தோம். அவர் பேப்பரைத் திருத்தி முடித்த பின், ஒவ்வொருவர் பெயராக வாசித்து, பேப்பரைக் கொடுத்தார். குறிப்பிட்ட பையனின் பெயரைச் சொல்லிக் கூப்பிடும்போது, அந்தப் பையன் கடைசி பெஞ்சில் உட்கார்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். திடீரென்று எழுந்திருந்து 'பிரசன்ட் மிஸ்' என்று சொன்னவுடன் எல்லோரும் கொல்லென்று சிரித்து விட்டோம். பாவம் அந்தப் பையனுக்கு என்னவோ போலாகி விட்டது.

- ஆர்.எஸ். லக்ஷ்மி, மதுரை



குளிர் வாட்டும் பனி மூட்டம்!



மார்கழி தையுடன் மாசிமும் மாதமும்
மாலையில் தொடங்கிடும் பனி மூட்டம்!
போர்வையை மெய்யினில் போர்த்தியே தூங்கிடும்
போதிலும் நடுங்கிடும் குளிர்வாட்டும்!

காரிருள் நெய்திடும் பூம்பனிச் சேலையைக்
கட்டியே பூமரம் தலையாட்டும்!
தூறலும் பெய்ததில் தேய்ந்தது போலொரு
தோற்றத்தைத் தாவர இலை காட்டும்!

கூரிய புற்களின் தோகைகள் யாவிலும்
குலுங்கிடும் பனித்துளி நகையாட்டம்!
ஏரிகள் பொய்கைகள் மீதினில் ஆவியும்
எழும்பிடும் காலையில் புகையாட்டம்!

ஊரெழும் வைகறை ஊடெதிர் பார்வையில்
உறைபனி விழுமொரு திரையாட்டம்!
சூரிய வெய்யிலின் சூடெழ நேர்கையில்
சுருண்டது விடுமொரு விரைவோட்டம்!


தளவை. இளங்குமரன்

வணக்கத்திற்குரிய கம்பம்!

பிரபலங்களின் வாழ்வில்...



• காந்தி



• ஆப்ரகாம் லிங்கன்

சொத்து!

தோழர் ப. ஜீவானந்தம் காரைக்குடிக்கும் திருப்பத்தூருக்கும் இடையே உள்ள சிராவயல் என்ற கிராமத்தில் காந்திஜி பெயரால் ஓர் ஆசிரமத்தை ஏற்படுத்தி நடத்தி வந்தார்.

காந்திஜி 1927- ஆம் ஆண்டு தமிழகத்துக்கு வந்த சமயம் இந்த ஆசிரமத்துக்கு விஜயம் செய்தார்.

ஜீவா தமது கையாலேயே நூலை மாலையாக்கி அவருக்கு அணிவித்தார்.

காந்திஜி ஆசிரமத்தைப் பார்த்துத் திருப்தியடைந்த பின்பு, "உங்களுக்கு ஏதாவது சொத்து இருக்கிறதா?" என்று கேட்டார்.

"பாரதமே என் சொத்து தானே!" என்று உடனே ஜீவாவிடமிருந்து பதில் வந்தது.

இப் பதிலைக் கேட்ட காந்திஜி "இல்லை இல்லை நீங்கள்தான் பாரதத்தின் சொத்து!" என்றார்!

-ஏ.எஸ். யோகானந்தம், ஒளவையார்பாளையம்

பஞ்சத்திற்குக் காரணம்?

செஸ்டர்டன் என்பவர் சிறந்த எழுத்தாளர். பருமனான உடல் வாய்த்தவர். அவர் தம் உடலமைப்பில் பெருமையும் பூரிப்பும் கொண்டிருப்பவர். அவர் பெர்னாட் ஷாவோடு ஒருநாள் பேசிக் கொண்டிருந்தபோது, "நீங்கள் நம் நாட்டுக்கு இழிவைத் தேடிக் கொடுக்கிறீர்கள். உங்களைப் பார்க்கும் வெளிநாட்டவர்கள் நம் நாட்டைப் பற்றி மிகவும் தவறாக மதிப்பிடுவார்கள்" என்று கூறினார். "ஏன்?" என்று பெர்னாட் ஷா கேட்டார். "உங்கள் உடலில் சதைப்பற்றே பிடிப்பதில்லை. ஒல்லியான உங்கள் உடலைப் பார்ப்பவர்கள் நம் நாடு பஞ்சமும் பட்டினியும் கொண்டதோ என்றே எண்ணுவார்கள்" என்று செஸ்டர்டன் விளக்கம் கொடுத்தார்.

"உண்மைதான். ஆனால் என்னுடைய மெலிவிற்குக் காரணம் உங்களைப் பார்த்ததுமே தெரிந்து விடும்" என்று பதிலளித்தார் பெர்னாட் ஷா.

- கி. சௌந்தரவல்லி, ஆடுதுறை

சுழற்கதவு...

தாமஸ் ஆல்வா எடிசன் வீட்டிற்கு ஒரு நண்பர் வந்தார். எடிசன் கண்டுபிடித்த விஞ்ஞானப் புதுமைகளை எல்லாம் புகழ்ந்து கூறி விட்டுத் திரும்பிப் போகும் போது, "உங்கள் வீட்டு வாசலில் ஒரு சுழற்கதவு வைத்திருக்கிறீர்களே! அது ஏன் இவ்வளவு சிக்கலாக இருக்கிறது. அதைச் சுற்றிக் கொண்டு உள்ளே வருவதற்கு ரொம்ப சிரமமாய் இருந்தது. அதைக் கொஞ்சம்

சரி பண்ணக்கூடாதா?" என்றார் அந்த நண்பர்.

"அது ஓர் இயந்திரக் கதவு. அதை ஒரு தரம் சுற்றினால் அதனோடு வெளியில் பொறுத்தப்பட்டுள்ள இயந்திரம் ஒரு காலன் தண்ணீரை என் வீட்டுத் தோட்டத்தில் உள்ள தொட்டியில் நிரப்பிவிடும்" என்றார் எடிசன்!

- மா. அழகுராஜன், இராஜபாளையம்


பதில் கடிதம்

ஒருமுறை காந்தியடிகள் தண்டி யாத்திரையில் ஈடுபட்டு சிறை சென்றிருந்தார். அப்பொழுது சபர்மதி ஆஸ்ரமத்தில் உள்ள குழந்தைகள் காந்தியடிகளிடம் சில கேள்விகள் கேட்டு கடிதம் போட்டிருந்தனர். காந்தியடிகள் பதிலுக்கு அவர்களுக்கு சுருக்கமாக ஓரிரு வரிகளில் கடிதம் போட்டிருந்தார். அதை விரும்பாத குழந்தைகள் அவருக்கு மறுபடி கடிதம் எழுதினர். 'இதுபோல, பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனருடைய சிறு சிறு கேள்விகளுக்குப் பத்தி, பத்தியாக விடையளித்தார். ஆனால் நீங்களோ ஒரு வரி, இரண்டு வரிகளிலே பதில் கடிதம் போடுகிறீர்களே' என்று. அதற்கு காந்தியடிகள் 'பகவான் கிருஷ்ணருக்கு இருந்ததோ ஒரு அர்ஜுனன் மட்டுமே! எனக்கு ஒரு கூட்டமல்லவா இருக்கிறது!' என்று பதில் அனுப்பினார்.

- ஜி. அன்னபூர்ணா, புலியகுளம்



* மார்க் ட்வைன்



* எடிசன்

உயிரோடிருக்கிறேன்!

பிரபல நகைச்சுவை எழுத்தாளர் மார்க் ட்வைன், ஒருசமயம் உடல் நலமின்றி படுத்த படுக்கையாக இருந்தார். அப்போது ஒரு பத்திரிகையில், மார்க் ட்வைன் இறந்துவிட்டார் என்று செய்தி வெளி வந்தது. உடல்நிலை குணமானதும் மார்க் ட்வைன் நகைச்சுவையோடு, "நான் இன்னமும் சாகவில்லை என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று ஒரு பத்திரிகைக்கு எழுதினார்.

- என். ஜரினா பானு, திருப்பட்டினம்

கம்பம்!

அமெரிக்காவில் ரஷ்யத் தூதுவரை ஆப்ரகாம் லிங்கன் சந்தித்தார். அப்போது லிங்கன் அந்த ரஷ்யத் தூதுவரைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்டார்.

"அன்பரே! நான் இந்த அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவனாக இல்லாதிருப்பேனானால் என்னை நீங்கள் எவ்வாறு மதிப்பீர்கள்?" என்பதே அது.

அதற்குக் கிண்டலுக்குப் பேர் போன அந்த ரஷ்யத் தூதுவர், "உங்களை ஒரு கம்பமாக மதிப்பேன்!" என்று கூறி ஆப்ரகாம் லிங்கனின் குச்சி போன்ற தோற்றத்தை எள்ளி நகையாடினார்.

ஆனால், லிங்கனோ கொஞ்சம் கூட வருந்தாமல் நிதானமாகக் கேட்டார்: "அதாவது உங்களுடைய தேசியக் கொடி பறக்கும் வணக்கத்திற்குரிய கொடிக் கம்பமாக மதிப்பீர்கள் இல்லையா?" என்று போட்டாரே ஒரு போடு!

- ஏ.எஸ். யோகானந்தம், கோபி

கண் கவர் விளக்கு; கடையில் விற்காத விளக்கு!

விடுகதைப் பக்கம்

I 1. கண்ணைக் கவரும் விளக்கு; கடையில் விற்காத விளக்கு - அது என்ன?

2. நாடு உண்டு, வீடு இல்லை. கடல் உண்டு, மீன் இல்லை. காடு உண்டு, மரம் இல்லை - அது என்ன?

3. ஊசி போட்ட வைத்தியர், ஊமை போல போகிறார், ஊசி வாங்கியவரோ 'ஓ'வென கத்துகிறார் - அவர் யார்?

4. எண்ணெய் வேண்டாம்; திண்ணை போதும். எரிவான், வெளிச்சம் தருவான் - அவன் யார்?

5. ஒரு பூ பூத்து, ஒரு கூடை நிறைய பழம் தரும் - அது என்ன?

- வே. அனிதா, சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி, செஞ்சி

II 1. ஆயிரம் பேருக்கு ஓர் அரைஞாண் கயிறு - அது என்ன?

2. வெள்ளைச் சீமாட்டிக்கு தலைக்கு மேலே விளக்கு - அவள் யார்?

3. வெளியில் இருப்பவனைத் தொட்டால் உள்ளிருப்பவன் அலறுகிறான் - அவன் யார்?

- நா. உமா ராணி, அறந்தாங்கி



III 1. உரசினால் போதும்; உயிர் முடிந்து போகும் - அது என்ன?

2. கல்லாலும் மண்ணாலும் கட்டாத வீடு; கதவு இல்லாத வீடு; காற்றிலே ஆடும் வீடு - அது எந்த வீடு?

3. அம்மா சப்பை; மகள் உருண்டை - அது என்ன?

4. ஆயிரம் பேர் வந்து சென்றாலும் வந்த சுவடு தெரியாது - அது என்ன?

- ஆர். அம்பிகா, மதுரை

IV 1. உயிரில்லை, ஊருக்குப் போவான்; காலில்லை, வீட்டுக்குப் போவான்; வாயில்லை, வார்த்தைகள் சொல்வான் - அவன் யார்?

2. குளம்படிச் சத்தக்காரன், சவாரிக்குக் கெட்டிக்காரன் - அது என்ன?

3. நாலு மூலையில் தள்ளும்; ஒரு மூலையில் தங்கும் - அது என்ன?

4. கண்ணால் பார்க்கும்; கண்டதைப் பறிக்கும்; பறித்ததைக் கொடுக்கும் - அது என்ன?

- தி.சே.அறிவழகன், திருப்புலிவனம்


விடைகள்

I 1. நிலா, 2. உலக வரைபடம், 3. தேன், 4. மெழுகுவர்த்தி, 5. வாழை

II 1. துடைப்பம், 2. மெழுகுவர்த்தி, 3. அழைப்புமணி

III 1. தீக்குச்சி, 2. குருவிக்கூடு, 3. அம்மி, குழவி, 4. எறும்பு

IV 1. கடிதம், 2. குதிரை, 3. துடைப்பம், 4. புகைப்படக் கருவி



நீரில் தோன்றிய

சாந்தோபா பணக்காரராய் இருந்தவர். இல்லையெனாது வாரி வழங்கிய வள்ளல். அவர் துறவு பூண்டு காட்டுக்கு வந்தார். கூடவே அவர் மனைவி யசோதாவும் வந்திருந்தாள்.

ஒருநாள் உஞ்ச விருத்தி எடுக்கும் போது யசோதாவின் நாத்தி நெய்யப் பங்களைக் கொடுத்தாள்.

ஆனால் சாந்தோபா அவற்றைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வரும்படி உத்தரவிட்டார்.

''வீசி எறிந்து விடலாம். குரங்கு, முயல் போன்றவை சாப்பிட்டுப் பசியாறுமே'' என்றாள் யசோதா.

''ஆனால் என் தங்கைக்கு அதை நான் சாப்பிடவில்லை என்று எப்படி தெரியும்? மறுபடி மறுபடி, இப்படிப்பட்ட பலகாரங்களைக் கொடுத்தனுப்புவாள். நீ இவற்றைத் திருப்பிக் கொடுத்து விட்டு வரும்வரை நான் பட்டினியாக இருப்பேன்'' என்றார் சாந்தோபா.

யசோதா வருத்தத்தோடு திரும்பிச் சென்று நாத்தியிடம் அப்பங்களைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வந்தாள்.

திரும்பி வருகையில் வானம் இருண்டு மழை கொட்டியது. இடி, மின்னல். வழியிலுள்ள காட்டாற்றில் வெள்ளம் பெருகி ஓடியது.

''பகவானே! இதென்ன சோதனை! நான் திரும்பிப் போகும் வரை அவர் சாப்பிடாமலிருப்பாரே'' என வருந்தினாள்.

அப்போது பதினைந்து வயதுப் பையன் ஒருவன் வந்தான். ''அம்மா! நான் ஓடமோட்டுபவன். இந்த மழையிலும் காற்றிலும் ஓடமோட்ட முடியாது. எனக்கு நன்றாக நீச்சல் தெரியும். என்னை உங்கள் தம்பியாக எண்ணி தோளில் அமர்ந்து கொள்ளுங்கள்! பத்திரமாக கரை சேர்க்கிறேன்'' என்றான்.

தயங்கியபடி வேறு வழியில்லாததால் அவன் முதுகில் அமர்ந்து கொண்டாள் யசோதா. நீந்தும்போது அவனது தோள்களில் சங்குச் சக்கர ரேகைகளைக் கண்டு பிரமித்தாள்.

பத்திரமாக கரை சேர்த்தவனிடம் ''உன் பெயர் என்ன?'' என்று கேட்டாள். ''பெருமாளுங்க'' என்றபடி காட்டுக்குள் மறைந்தான் அவன்.

சாந்தோபாவிடம் இதைப் பற்றி



பாலம்!

ஆர்.பொன்னம்மாள்

சொன்னபோது ஓடக்காரன் காசியை அழைத்து விசாரித்தார் அவர்.


"பெருமாளா! அப்படி ஒருத்தனுமே கிடையாதே!" என அதிசயித்தான் அவன். சாந்தோபா "யசோதா! பரந்தாமன் உனக்கு வாகனமாக இருந்திருக்கிறார்! நீயே பாக்கியவதி!" என உருகினார்.

ஒருநாள் சாந்தோபாவுக்கு பிட்சையிடும் மங்கை அழுது கொண்டேயிருந்தாள்.

"அம்மணி! தங்கள் வேதனையின் காரணத்தை நானறியலாமா?" என்று கேட்டார் சாந்தோபா.

"ஸ்வாமி! என் புருஷன் எப்போது பார்த்தாலும் 'நானும் சாந்தோபாவைப் போல் சாமியாராகி விடுவேன்' என்று பயமுறுத்திக் கொண்டே இருக்கிறார்" என்றாள்.

"அம்மா! அடுத்தமுறை உன் கணவன்





முதல் பெருக்கல்

ஆதிரட் என்ற கிறிஸ்துவ மதகுரு 1631-ல் முதன்முறையாகப் பெருக்கலுக்கு 'இன்ட்டு' குறியைப் பயன்படுத்தினார். இவ்வாறே முக்கோணத்தின் பக்கங்களுக்கு இடையேயுள்ள தொடர்பைக் குறிக்க சைன், காஸ், டேன் என்னும் வார்த்தைகளைப் பயன்படுத்தினார்.

- சென்னை நெ. இராமன்

அப்படி மிரட்டினால், 'போய்க் கொள்' என்று சொல்லி விடு. பயப்படாதே! விரைவில் துறவு வாழ்க்கை அலுத்து உன்னிடம் திரும்ப வருவான்'' என்று கூறிச் சென்றார்.

மறுநாள் மூர்க்கன் சண்டை போட்டு அச்சுறுத்த சாந்தோபா சொன்னபடியே அவன் மனைவி, ''அதுதான் தலைவிதி என்றால் யாரால் மாற்ற முடியும்? போய்க் கொள்ளுங்கள்'' என்று கூறினாள்.

சாந்தோபாவிடம் சீடனாய் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினான்.

சாந்தோபா ''முதலில் ஆற்றில் குளித்து விட்டு வா. மாற்று ஆடைகளையும் செம்பையும் இப்படி வைத்து விட்டுப் போ'' என்றார்.

தினமும் வெந்நீரில் குளித்த சொகுசான உடம்பு, குளிர்ந்த நீரில் விறைத்தது. பற்கள் வெட வெடத்தன. நடுங்கியபடியே வந்தவன் மாற்று ஆடைகளைத் தேடினான். கிடைக்கவில்லை! சாந்தோபாவிடம் கேட்டான்.

''அன்பனே! உட்கார். உண்மையான துறவுக்குச் சப்ரமஞ்சக் கட்டிலும் மண் தரையும் ஒன்றுதான்! அறுசுவை உணவும் உப்பில்லாக் கஞ்சியும் ஒன்றுதான்! முதலில் இந்த வேப்பங் கொழுந்தை சாப்பிடு. வயிறு சுத்தமாகட்டும்'' என்று வேப்பங் கொழுந்துகளைக் கொடுத்தார்.

''என்னை மன்னித்து விடுங்கள்! சாமியாராவதில் இத்தனை சிரமங்களா? என் மனைவி சுடச்சுடச் சமைத்துப் பரிமாறியதை சுவைத்த நாக்கு. என்னால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. நான் வீட்டிற்குப் போகிறேன்'' என்றான்.

சாந்தோபா புன்னகையுடன் ''இனியாவது மனைவியிடம் அன்புடன் நடந்து கொள். பயமுறுத்தி காரியத்தை சாதித்துக் கொள்ளாதே'' என்றார். அவனும் அப்படியே இருப்பதாக வாக்களித்து வீட்டிற்குத் திரும்பினான்.

ஆடி மாதம் வளர்பிறை ஏகாதசி. மலையெல்லாம் மழைச்சாரல் கட்டிக் கொண்டு மழை வெளுத்துக் கட்டியது. பீமா நதியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.


ஏகாதசி தரிசனத்துக்குப் பண்டரிபுரம் செல்ல நரசிங்கபுரத்தில் பக்தர் கூட்டம் தவித்தபடி நின்றிருந்தது. சாந்தோபா வந்து, ''ஏகாதசிக்குப் பகவானை தரிசிக்க முடியாதா?'' என வருந்தினார். சாந்தோபா ஆற்றங்கரைக்கு வந்தார். பரந்தாமனைப் பிரார்த்தித்தார்.

''மச்சமாகவும் கூர்மமாகவும் அவதரித்தவனே! கோவர்த்தன மலையைத் தாங்கி கோகுலத்தை மழையிலிருந்து காத்தவனே! இலங்கையைக் கடக்க பாலம் அமைத்தது போல் எங்களுக்கொரு பாலம் கிடைக்காதா? யமுனை அன்று வழி விட்டது போல் பீமா நதியை இன்று வழி விடச் சொல்வாயா?'' என உருகி வேண்டினார்.

என்ன ஆச்சரியம்! தண்ணீரில் ஒரு பாதை தோன்றியது. சாந்தோபா மகிழ்ச்சியுடன் முன் நடக்க பக்தர்கள் பின் தொடர்ந்தனர். பஜனை செய்தபடியே அக்கரை சென்றனர். ஏகாதசி தரிசனம் முடிந்து திரும்பி வரும்போதும் அந்தப் பாலம் அப்படியே இருந்தது. அந்த வழி சீத்தாப்பழத்தின் தோலைப் போல், ஆனால் கெட்டியாக இருந்தது.

பக்தர்கள் வந்தபின் அந்தப் பாதை நகரும்போதுதான் அது ஒரு பெரிய ஆமை எனத் தெரிந்தது.

சாந்தோபாவுக்காக பகவான் கூர்மாவதாரம் எடுத்து வந்ததாக மக்கள் கொண்டாடினர்.



புதிர் உலகம்

பறவைகள் எத்தனை? பணம் எவ்வளவு?

I. பறவைகளை வாங்கி விற்கும் ஒரு வியாபாரி தன் மகனுக்கு வியாபாரத்தைக் கற்பிக்க விரும்பி நூறு ரூபாயை அவனிடம் கொடுத்தார். பறவைகள் வாங்க வேண்டிய இடத்தையும் அவற்றை விற்பனை செய்ய வேண்டிய சந்தையையும் அறிமுகம் செய்து வைத்தார்.

தேன்சிட்டு, கருஞ்சிட்டு, சாம்பல் குருவி, பச்சைக்கிளி, மைனா, குயில், கோழி, வாத்து மற்றும் வான்கோழி ஆகிய பறவையினங்களை வாங்கி ஒவ்வொரு பறவைக்கும் ஒரு ரூபாய் லாபம் வைத்து விற்கச் சொன்னார். மேற்கண்ட வரிசைப்படி பறவைகளை வாங்கினால் ஒன்றின் விலை அதற்கு அடுத்த இனப்பறவையைவிட ஒரு ரூபாய் அதிகம் என்ற விவரத்தையும் தெரிவித்தவர் மாலையில் வீடு திரும்பும்போது அசல் ரூபாய் 100 - உடன் மேற்படி பறவைகளில் ஒன்று வீதம் ஒன்பது பறவைகளையும் கொண்டு வர வேண்டும் என்றார்.

அப்படியானால் அவரது மகன் எந்தெந்தப் பறவையை எத்தனை வாங்கினான்? என்ன விலைக்கு வாங்கி என்ன விலைக்கு விற்றிருப்பான்?

- டி. அகமது ஆதில், பத்தாம் வகுப்பு, பள்ளங்கோயில்

II. நண்பர்கள் மூவர் மாந்தோப்புக்குச் சென்றனர். அங்கு ஆறு மரங்களில் மட்டுமே காய்கள் இருந்தன. அவற்றில் முறையே 62, 33, 38, 36, 32, 30 காய்கள் இருந்தன.

இதில் மூன்றாம் நண்பர் ஒரு மரத்திலிருந்த காய்களையும், இரண்டாம் நண்பர் இரண்டு மரங்களிலிருந்த காய்களையும், முதல் நண்பர் மூன்று மரங்களிலிருந்த காய்களையும் பறித்துக் கொண்டார்கள். காய்களை எண்ணியபோது முதலாம் நண்பரிடம் நிறையக் காய்கள் இருந்தன.


முதலாம் நண்பரிடம் இருந்த காய்களின் எண்ணிக்கையில் பாதியளவே இரண்டாம் நண்பரிடம் இருந்தன. இரண்டாம் நண்பரிடம் இருந்த காய்களின் எண்ணிக்கையில் பாதியளவே மூன்றாம் நண்பரிடம் இருந்தன. அப்படியென்றால் யார் யார் எந்தெந்த மரத்தில் காய்களைப் பறித்தார்கள். அவர்களிடம் தனித்தனியாக இருந்த காய்களின் எண்ணிக்கை எத்தனை?

- ஏ.ஜி. முகம்மது தௌபீக், மேலப்பாளையம்

III. ராமசாமியின் வயதைத் திருப்பிப் போட்டால் அவர் மனைவியின் வயது வரும். அவர்கள் இருவரின் வயதையும் கூட்டிப் பதினொன்றால் வகுத்தால் அவர்கள் வயது வித்தியாசம் ஒன்பது என்று வரும். ராமசாமி மூத்தவர் என்றால், அவர்கள் வயதைக் கண்டுபிடியுங்கள் பார்ப்போம்!

- என். ஜரினாபானு, திருப்பட்டினம்

IV.(a) ராமுவும் கோபுவும்



நண்பர்கள். இருவரும் வெளியூர் பயணம் கிளம்பினார்கள். ராமு நாள்தோறும் 30 மைல்தான் சைக்கிளில் போவான். கோபு முதல் நாள் ஒரு மைலும் பிறகு ஒவ்வொரு நாளும் ஒரு மைல் அதிகமாக பிரயாணம் செய்கிறான். இருவரும் எங்கே எப்பொழுது ஒன்று சேர்வார்கள்?

(b). இரண்டு மூட்டைகளில் மொத்தம் 40 படி அரிசி இருந்தது. பெரிய மூட்டையில் உள்ள அரிசியில் பாதியில் 5 படி குறைவாகச் சிறிய மூட்டையில் இருக்கிறது. அப்படியானால் ஒவ்வொரு மூட்டையிலும் இருந்த அரிசி எவ்வளவு?

- ச. அழகுவேல், க.தர்மத்துப்பட்டி

V 1. கடற்கரையை தேசிய சின்னமாகக் கொண்ட நாடு ______

2. 'உலகின் பால் பண்ணை' என்ற புகழுக்குரிய இடம் ______

3. மிகப் பெரிய தேசியக் கொடி உள்ள நாடு ______

4. கடல் மட்டத்துக்குக் கீழே உள்ள நாடு ______


5. 'வானம்பாடி' பறவையை தேசிய பறவையாகக் கொண்ட நாடு ______

- ச. அருண்குமார், தஞ்சாவூர்

விடைகள்

I. ஒரு ரூபாய் வீதம் இரண்டு தேன்சிட்டு வாங்கி ஒன்றை மட்டும் இரண்டு ரூபாய்க்கு விற்றிருப்பான். ஒரு தேன்சிட்டு லாபம்.

இரண்டு ரூபாய் வீதம் மூன்று கருஞ்சிட்டு வாங்கி இரண்டை மட்டும் மூன்று ரூபாய் வீதம் விற்றிருப்பான். ஒன்று லாபம்.



மூன்று ரூபாய் வீதம் நான்கு சாம்பல் குருவி வாங்கி, நான்கு ரூபாய் வீதம் மூன்றை மட்டும் விற்றுவிட்டு ஒன்றை வைத்துக் கொண்டிருப்பான்.

நான்கு ரூபாய் வீதம் ஐந்து பச்சைக் கிளி வாங்கி, ரூ. 5 வீதம் நான்கை விற்று ஒன்றை லாபமாக்கிக் கொண்டிருப்பான்.

ஐந்து ரூபாய் வீதம் ஆறு மைனா வாங்கி, 5 மைனாக்களை மட்டும் ரூபாய் ஆறு வீதம் விற்று ஒன்றை வைத்திருப்பான். இதே போல் ஆறு ரூபாய் வீதம் ஏழு குயில் வாங்கி, ஆறு குயிலை ஏழு ரூபாய் வீதமும், ஏழு ரூபாய் வீதம் எட்டு கோழி வாங்கி எட்டு ரூபாய் வீதம் ஏழு கோழியை மட்டும் விற்பான். மீண்டும் எட்டு ரூபாய் வீதம் ஒன்பது வாத்து வாங்கி எட்டை மட்டும் 9 வீதம் விற்று ஒரு வாத்தையும், ஒன்பது ரூபாய் வீதம் பத்து வான்கோழி வாங்கி ரூ.10 வீதம் ஒன்பதை மட்டும் விற்று விட்டு மிஞ்சிய ஒரு தேன்சிட்டு, க. சிட்டு, சா. குருவி, கிளி, மைனா, குயில், கோழி, வாத்து வான்கோழியுடன் ரூ.100 அசலுடன் திரும்பியிருப்பான்.

II. முதல் மூன்று மற்றும் ஐந்தாம் மரத்தில் பறித்த முதலாம் நண்பரிடம் 132 (62 + 38 + 32) காய்களும், நான்கு மற்றும் ஆறாம் மரத்தில் பறித்த இரண்டாம் நண்பரிடம் 66 (36 + 30) காய்களும், இரண்டாம் மரத்திலிருந்து பறித்த மூன்றாம் நண்பரிடம் 33 காய்களும் இருந்தன.

III. ராமசாமியின் வயது 54, அவர் மனைவியின் வயது 45, கூட்டுத்தொகை 99 பதினொன்றால் வகுத்தால் வருவது 9. வயது வித்தியாசம் 9.

IV (a). இருவரும் 1770வது மைலில் ஒன்று சேருவார்கள்.

(b). பெரிய மூட்டையில் இருந்த அரிசி = 30 படி

சிறிய மூட்டையில் இருந்த அரிசி = 10 படி.

V. ஐந்திற்கும் விடை டென்மார்க்





• முதல்வர்



• தாளாளர்

குறைந்த வயதில் நிறைந்த சாதனை!

குமரி என்றால் இளமை, இளமை என்றால் குமரி. குமரி என்ற அடைமொழி தாங்கித் திகழும் எங்கள் குமரி மெட்ரிகுலேஷன் பள்ளி நாகர்கோயில், கோட்டார் பகுதியில் அமைந்திருக்கிறது.

'கல்விப் பணியே கடவுள் பணி' என்ற வாக்கியத்துக்கு ஏற்ப எங்கள் பள்ளி நிறுவனர் கோபாலகிருஷ்ணர் அவர்களால் உருவானதே எங்கள் குமரி மெட்ரிகுலேஷன் பள்ளி.

துவங்கி இரண்டே வருடங்களில் சிறந்த சேவையில் நிறைந்த பெயரீட்டி வியந்து பேசப்படும் பள்ளி இதுவென்றால் மிகையாகாது.

குழந்தைகளின் இயல்பான இசை உணர்வை வெளிக் கொணர இசைப் பயிற்சி, சுய ஆளுமைக்கான யோகா பயிற்சி, இலவச கராத்தே, நடனம், விளையாட்டுகள், ஓவியம், கட்டுரை, கவிதை என பல துறைகளிலும் இந்த இளந்தளிர்களின் வளர்ச்சியே குறிக்கோளாகக் கொண்டு பயிற்சியளித்து வருகிறோம்.

குமரியின் இந்த இரு வயதில் இரண்டு முறை மாவட்ட அளவில் அறிவியல் கண்காட்சி, இலக்கிய விழாக்கள், இலவச மருத்துவ முகாம்கள், மும்மத விழாக் கொண்டாட்டங்கள், தனிப் பாடக் கழகங்கள், ஆசிரியர் கருத்தரங்கு என சொல்லிக் கொண்டே போகும் அளவில்... பலவற்றைச் செய்து வருகிறது.

இந்தக் கல்வியாண்டில் மட்டும் இரண்டு முறை சிறந்த பள்ளிக்கான சிறப்பு விருதுகள் கிடைத்துள்ளன.

சென்னையில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு சினி கலை மன்றத்தினரால் 'பெஸ்ட் மெட்ரிக் ஸ்கூல் இன் நாகர்கோயில்' என்ற விருது பள்ளித் தாளாளரிடம் வழங்கப் பட்டது.

டெல்லி, இன்டர்நேஷனல் ஃபிரெண்ட் ஷிப் சொசைட்டி என்ற அமைப்பின் மூலம் இப் பள்ளி தாளாளருக்கு பள்ளியைச் சிறப்பாக நடத்திச் சென்றமைக்கும் பிற தகுதிகளின் அடிப்படையிலும் 'ராஷ்டிரிய கௌரவ்' என்ற விருது வழங்கப்பட்டது.



"உனக்கு ஒண்ணுமே தெரியாதுன்னு முத்து சொல்றானே!"

"அவன் யார் என்றே எனக்குத் தெரியாது!"

- ஏ. முகமது நபேல்,
இரண்டாம் வகுப்பு

கருணை!

நான் பழங்களை விரும்புகிறேன்
அவற்றின் அருமையான சுவைக்காக
நான் மலர்களை விரும்புகிறேன்
அவற்றின் இனிமையான மணத்திற்காக
நான் இயற்கையை விரும்புகிறேன்
அது தரும் வாழ்க்கைக்காக
நான் கருணை மிக்க இதயத்தை
விரும்புகிறேன்.
அது செலுத்தும் அன்பு
மற்றும் உதவிக்காக!

- ப்ரியதர்ஷினி, ஏழாம் வகுப்பு

உதிர்ந்த பூக்கள்!

உதிர்ந்தன
நட்சத்திரப் பூக்கள்
தாங்கிக் கொண்டன
வேப்பமரம்

- டி.எஸ். கிஷோர், ஏழாம் வகுப்பு

சிறந்த பள்ளி

அறிவையும் ஒழுக்கத்தையும்
தருகிறது எங்கள் பள்ளி!
நேர்மையும் எளிமையும் மிகுந்த
நண்பர்களைத் தருகிறது
எங்கள் பள்ளி!
அனைத்தையும் நேசிக்கக்
கற்றுத் தரும் ஆசிரியர்களை
வழங்கியுள்ளது எங்கள் பள்ளி!
இத்தனையும் தரும்
எங்கள் பள்ளி சிறந்த பள்ளி.

- ஸ்ரீநாத், ஏழாம் வகுப்பு



↑ எஸ். சுதீர்பிரகாஷ்,
யு.கே.ஜி

பி. ஹர்ஷினி,
இரண்டாம் வகுப்பு →





← எம். ரமேஷ்,
யு.கே.ஜி

ஆதித்ராய்,
பிரீ.கே.ஜி →



நாகர்கோயில் குமரி மெட்ரிகுலேஷன் பள்ளி ஸ்பெஷல்

முடியாது! முடியாது!

சேமிப்பை அலட்சியப்படுத்தி வளமையைக் கொண்டு வர முடியாது!

வலிமையை வலுவிழக்கச் செய்து பலவீனத்தைப் பலப்படுத்த முடியாது!

கூலி கொடுப்பவனை ஊனமாக்கி கூலி வாங்குபவனுக்கு உதவ முடியாது!

- பி.வி. வைஷ்ணவி,
ஐந்தாம் வகுப்பு

''எங்க வீட்டுக் கொசுவுக்கெல்லாம் ரொம்ப சொகுசு அதிகம்.''

''எப்படி?''

''ஃபேன் போடலைனா வந்து கடிக்கும்.''

''மன்னர் பாதி அரண்மனையை வித்துட்டாராம்.''

''அப்ப அரைமனைத்தான் இருக்குன்னு சொல்லு.''


- எஸ்.எம்டி. முனின் ஹசன்,
ஆறாம் வகுப்பு



நிறம்!

வண்ணத்துப் பூச்சியே!
பூக்களின் நிறங்களை
திருடிக் கொண்டாயா நீ?
இல்லை உன் நிறத்தினை
பூக்களில் தீட்டிவிட்டாயா?

- எம்.ஜி.பி. அபிலாஷ், ஆறாம் வகுப்பு





← எம். அரவிந்த், ப்ரீ.கே.ஜி



↑ அப்ரிடி,
முதலாம் வகுப்பு

சி.எஸ். அஸ்வின் ராஜ்,
யு.கே.ஜி ↓





← என்.வி. விஷாக் மோகன்,
மூன்றாம் வகுப்பு

நாகர்கோயில் குமரி மெட்ரிகுலேஷன் பள்ளி ஸ்பெஷல்


எஸ். இந்திரஜித், ஆறாம் வகுப்பு



ஆர்.கே. ரீமாதேவி, இரண்டாம் வகுப்பு



ஆர். சந்தோஷ், யு.கே.ஜி



ஏ. முகேஷ் கார்த்திக், ஐந்தாம் வகுப்பு



கே.யு. லக்ஷ்மி, பிரி.கே.ஜி



மோனிஷா, இரண்டாம் வகுப்பு



ஏ. அனாஸ், மூன்றாம் வகுப்பு



எஸ்.ஆர். மோனிசா, இரண்டாம் வகுப்பு



ஏ. புவனா, இரண்டாம் வகுப்பு



ஏ. சகாயரோஷன், யு.கே.ஜி



ஒட்டகச்சிவிங்கியின் கழுத்து ஏன் இவ்வளவு நீளம்?



• ஆர். மலர்விழி, திருச்செந்தூர்

? மழையில் நனைந்த அனுபவம் உண்டா ஜக்கு?

நிறையப் பேருக்கு மழையில் நனையும் அனுபவம் பிடிக்கும். அதிலும் நம் ஊர்களில் மழை பெய்வது என்பது அடிக்கடி நிகழக்கூடிய விஷயமல்ல. மழையில் நனைந்து அந்த ஆனந்தத்தையும் அனுபவித்திருக்கிறேன்; மறுநாள் ஜலதோஷம் பிடித்து அவஸ்தையும் பட்டிருக்கிறேன் மலர்.

• என். ஸ்ரீனிவாசன், புதுக்கோட்டை

? ஜக்கு, என் பெயரைச் சுருக்கி சீனு என்று கூப்பிடுகிறார்கள். உன் பெயரை எப்படி சுருக்கிக் கூப்பிடறது ஜக்கு?

என் பெயரின் சுருக்கம்தான் ஜக்கு. இதையும் சுருக்கி நீங்கள் எப்படி கூப்பிட்டாலும் எனக்கு சந்தோஷமே!



• தி. சரண்யா, திருச்சி

? ஜக்கு, நீ அரவிந்தா கேட்ட கடிகார நேரம் 10.10க்கான பதில் தவறு. அது கடிகாரம் கண்டுபிடித்தவர் இறந்த நேரம். தயவு செய்து மாற்றி வெளியிடு. (கோபித்துக் கொள்ளதே!)

சரண்யா, நீங்கள் சொல்வது போன்ற காரணத்தை நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அதற்கான ஆதாரம் ஒன்றும் இல்லை. உங்கள் பதிலுக்கு ஆதாரம் இருந்தால் எழுதி அனுப்புங்கள். அதை ஏற்றுக் கொள்வதில் எனக்கு ஒன்றும் தயக்கம் இல்லை சரண்யா.



அன்புள்ள ஜக்கு...

• டி. மணிகண்டன், பம்மல்

? குரங்கு ஏன் பூமாலையைப் பிய்க்கிறது ஜக்கு?

ஆறறிவு படைத்த உங்களுக்குத்தான் அது அழகான பூமாலை. குரங்கைப் பொறுத்தவரை அது ஏதோ ஒரு பொருள். அதை வைத்துக் கொண்டு அது என்ன செய்

யும்? அதால் முடிந்ததைச் (பிய்த்து எறிவதை) செய்கிறது. அது சரி குரங்கிடம் ஏன் பூமாலை தர வேண்டும் மணி கண்டன்?

● அ. தாமரைச்செல்வி, மதுரை

? ஐக்கு, நமக்கெல்லாம் கழுத்து எவ்வளவு சின்னதா இருக்கு! ஆனால் இந்த ஒட்டகச்சிவிங்கிக்கு கழுத்து ஏன் இவ்வளவு நீளம்?

நீண்ட கழுத்தும் நீளமான முன்னங்கால்களும் ஒன்றுக்கொன்று சமநிலை உறுப்புகளாக அமைந்துள்ளன. ஒட்டகச்சிவிங்கி சைவப் பிராணி. நீண்ட கழுத்து உயரமான மரத்திலுள்ள இலைகளைக் கடித்துச் சாப்பிடவும் உயரமான மரங்களுக்குப் பின் நின்று மற்ற பிராணிகளைக் கவனிப்பதற்கும் உதவுகிறது. ஆரம்ப காலத்தில் மரங்கள் குட்டையாக இருந்ததால் அவற்றுக்கு இணையாக இந்தப் பிராணிகளின் கழுத்தும் குட்டையாக இருந்தன. பிறகு மரம் வளர வளர, மரத்திலுள்ள இலைகளைப் பறித்து தின்ன அடிக்கடி கழுத்தை உயர்த்த வேண்டியதாகி விட்டது. உடலில் எந்த உறுப்பு அதிகமாகப் பயன்படுகிறதோ அந்த உறுப்பு சிறப்பாக வளர்ச்சி பெறும். இதனால் ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தும் நீண்டுவிட்டது. மனிதர்கள் தற்போது 32 பற்களையும் பயன்படுத்துவதில்லை. இன்னும் சில நூற்றாண்டுகளில் 28 பற்கள்தான் இருக்கும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

● எம். சந்தோஷ்குமார்,
நெல்லிக்குப்பம்

? ஆசிரியர் பரீட்சை பேப்பரைக் கொடுக்கும்போது இதயம் வேகமாகத் துடிக்கிறதே, ஏன் ஐக்கு?

மார்க் குறைஞ்சிடுமோ என்ற பயத்தில் பரீட்சை பேப்பரைப் பார்த்ததும் இதயம் வேகமாகத் துடிக்கிறது. பயம், கோபம் முதலியவை நம் உடலில் உள்ள அட்ரினல் சுரப்பியைத் தூண்டி, அட்ரினலின் என்ற ஹார்மோன்களை மிகுதியாக வெளிக் கொண்டு வருகிறது. இந்த ஹார்மோன்கள் ரத்தத்துடன் கலந்து இதயத்துடிப்பை அதிகப்படுத்துகின்றன. உயர் ரத்த அழுத்தத்தையும் உண்டாக்கி விடுகின்றன. எனக்கு சந்தோஷத்தில்கூட இதயம் அதிகமாக துடிக்கும் சந்தோஷ்.

● தி.மகுடேஸ்வரி, கம்பம்


? ஆமை புகுந்த வீடு உருப்படாது என்று சொல்கிறார்களே, உண்மையா ஐக்கு?

இதில் சிறிதும் உண்மை இல்லை மகுடேஸ்வரி. பாவம் ஆமை! ஆமை மிகவும் மெதுவாக நகரும் பிராணி. அந்த ஆமை மெதுவாக நகர்ந்து வீட்டுக்குள் செல்லும் வரை யாரும் கவனிக்கவில்லை என்றால் வீட்டின் பாதுகாப்பு கேள்விக்குரியதாகி விடுகிறதல்லவா? பொறுப்போடு செயல்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தவே இப்படி ஒரு பழமொழியைக் கூறியிருப்பார்கள்.



சுழல் கோப்பை யாருக்கு?

2004 ஆம் ஆண்டு சுழல் கோப்பையைப் பெறப் போவது எந்தப் பள்ளி? மதுரை, நல்லூர், சேலம்,இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பள்ளிகளில் ஒன்றுதான் கோப்பையைப் பெற இருக்கிறது. வாழ்த்தத் தயாராக இருங்கள். அடுத்த மாதம் வரை காத்திருங்கள்!



விவாத மேடை

செல்லப் பிராணிகள்!

கிறிஸ்துமஸ் கேக் எடுத்துக் கொண்டு டெய்சியும் ப்ரியாவும் விவேக் வீட்டுக்குச் சென்றனர்.

விவேக் தோளில் ஒரு பூனைக் குட்டி அமர்ந்திருந்தது. அவன் கையில் சிறிய கூண்டு. அதற்குள் ஒரு கிளி இருந்தது.

"என்ன விவேக், உன் செல்லப் பிராணிகள் லிஸ்ட்ல புதுசா இந்தக் கிளியும் சேர்ந்து விட்டதா?" என்று கேட்டாள் டெய்சி.

"அடடா! வாங்க ரெண்டு பேரும். போன வாரம் இந்தக் கிளி எங்க தோட்டத்துல அடிபட்டுக் கிடந்தது. நான்தான் அதை எடுத்து மருந்து போட்டு குணப்படுத்தினேன். பாரு ப்ரியா, எவ்வளவு அழகா இருக்கு!" என்றான் மகிழ்ச்சியுடன் விவேக்.

"விவேக், கிளிதான் குணமாயிடுச்சே, அதை வெளியில் பறக்க விடறதுதானே?" என்றாள் ப்ரியா.

"ப்ரியா உடனே பிரசங்கம் பண்ண ஆரம்பிச்சிடுவாளே! இங்க பாரு ப்ரியா நான் நாய், பூனை, ஆடு எல்லாம் வளர்க்கிறேன். அதே போல் இந்தக் கிளியும் என்னோட செல்லப் பிராணி. இதில் என்ன தப்பு?" - விவேக்.

"பூனை, நாய், ஆடு எல்லாம் நீ கூண்டுக்குள் வச்சு வளர்க்கலை. அதுங்க வெளியில் சுற்றிட்டு, மீதி நேரம் உன் வீட்டில் இருக்கின்றன. அவற்றுக்கும் இயல்பு பெரிதாக மாறலை; உனக்கும் செல்லப் பிராணிகளை வளர்த்த சந்தோஷம். ஆனால் இந்தக் கிளி பறந்து திரியும் பறவை. அதை இந்தச் சின்னஞ் சிறிய கூண்டுக்குள் அடைக்கும் போது அதன் இயல்பே மாறி விடுகிறது இல்லையா?" - ப்ரியா.

"ப்ரியா, கிளியின் உயிரை விவேக் தானே காப்பாற்றியிருக்கான். அவனைப் போய் குற்றம் சொல்லறீயே?" என்று சற்றுக் கோபப்பட்டாள் டெய்சி.

"கிளியைக் காப்பாற்றின வரை விவேக் செய்தது மிகவும் மதிக்கத்தக்க, பாராட்ட வேண்டிய விஷயம்தான்! இப்ப கிளியை அவன் வெளியே விட்டால் இன்னும் உயர்ந்த மனிதனாகி விடுவான்" என்றாள் ப்ரியா.

"செல்லப் பிராணிகளின் அருமை ப்ரியாவுக்குத் தெரியாது. அதான் இப்படி பேசறா. நான் எவ்வளவு அன்புடன் கவனிச்சுக்கறேன் தெரியுமா?" - விவேக்.

"விவேக், உன்னை ஒரே அறையில் அடைத்து வைத்தால் எப்படி இருக்கும்? யோசித்துப் பார்."

"சரி, ப்ரியா. உனக்காக இந்தக் கிளியை வெளியில் விடறேன்" என்றபடி கூண்டுக் கதவைத் திறந்தான் விவேக்.


கிளி வட்டமடித்து பறந்து சென்றது.

"தேங்க்ஸ் விவேக். நான் கிளம்பறேன்."

"என்ன நீ வந்த காரியம் முடிஞ்ச உடனே கிளம்பிட்டே? சரி, நாளைக்குப் பள்ளியில் சந்திப்போம்" என்றான் விவேக்.

- தம்பிப்பயல்

நண்பர்களே, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? எழுதி அனுப்புங்கள்.





புலவர் கொடுத்த

இரத்தினபுரி மன்னன் மாறவர்மன் நல்லாட்சி புரிந்து வந்தார்.

அந்த மன்னருக்குப் பிறந்தநாள் வந்தது. பிறந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாட நினைத்தார். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி உத்தரவிட்டார்.

எங்கும் கலையழகு பூத்துக் குலுங்கியது.


மந்திரி பிரதானிகள், படை வீரர்கள், குடி மக்கள் எல்லோரும் வெகு ஆடம்பரமாகத் தங்களை அலங்காரம் செய்து கொண்டு ஏராளமானப் பரிசுப் பொருட்களைக் கொண்டு வந்து மன்னருக்குக் கொடுத்தார்கள்.

கூட்டம் சிறிது, சிறிதாகக் குறைந்த பின், கடைசி ஆளாக ஒரு பெரியவர் கையில் சிறிய மூட்டையை வைத்துக் கொண்டு தயங்கியவாறு நின்று கொண்டிருந்தார்.

அரசர் அந்தக் கடைசி ஆளை ஆவலோடு பார்த்து, "பெரியவரே! நீங்கள் விரும்பியதைத் தாராளமாக எனக்குக் கொடுக்கலாமே! ஏன் வீணாகப் பயப்படுகிறீர்கள்?" என்று கேட்டார்.

"அரசே! நான் வறுமையில் வாடும் ஏழைப் புலவன். என்னிடம் தங்களுக்குப் பரிசாகக் கொடுக்க ஒன்றுமில்லை."

"ஓஹோ! அப்படியா? கவலையை விடுங்கள். நீங்கள் எந்தப் பொருளைப் பரிசாகக் கொடுத்தாலும் அதை நான் மகிழ்ச்சியோடு பெற்றுக் கொள்வேன். நான்



பரிசுகள்!

காரமடை துரை. முருகேசன்

பொருளைப் பெரிதாக மதிப்பதில்லை. கொடுப்பவரின் உயர்ந்த உள்ளத்தைத் தான் மிகப் பெரிய பரிசாக மதிக்கிறேன்'' என்றார் அரசர்.

அரசர் முன் ஒரு சிறிய மூட்டையை வைத்தார் அந்தப் பெரியவர்.

பணியாள் ஒருவன் அந்த மூட்டையை அவிழ்த்தான்.

சிறு பை நிறைய கற்கள்; ஒரு பெரிய தடி; ஒரு பெரிய வலை மூன்றும் இருந் தன.

அரசருக்குத் தூக்கி வாரிப் போட்டது. பெரியவர் தம்மை அவமானப்படுத்துகிறார் என்று கடுங்கோபமடைந்து, ''பெரியவரே! என்ன இதெல்லாம்?'' என்று கோபக்கனல் பொங்க எரிச்சலோடு கேட்டார்.

உடனே பெரியவர் ''அரசே! எல்லாம் நன்மைக்கே என்று இந்தப் பொருளை யெல்லாம் தய்வு செய்து ஏற்றுக் கொள் ளுங்கள். நீங்கள் எங்கு சென்றாலும் இந்தப் பொருள்களை மறக்காமல் கொண்டு செல்லுங்கள். இந்தப் பொருள் களினால் உங்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால் அது உங்களுக்கும் இந்த நாட்டுக்கும் நல்லதல்லவா. இதனால் ஏதேனும் தங்களுக்குச் சிறு தீமை ஏற்பட்டாலும் அதற்குத் தாங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் மகிழ்ச்சியோடு நான் அதை ஏற்றுக் கொள்கிறேன்'' என்று பெரியவர் கூறினார்.

அரசரும் ஏற்றுக்கொண்டார்.

ஒரு நாள் அரசர் அமைச்சரிடம், ''அமைச்சரே! நகர சோதனைக்குப் போய் வெகு நாட்களாகிவிட்டன. இன்று புறப் படலாம்' என்றார்.

அன்று இரவு. ஊர் அடங்கிய பிறகு அரசர் அமைச்சர், மெய்க்காப்பாளர் களுடன் மாறுவேடமணிந்து கொண்டு நகர சோதனைக்குப் புறப்பட்டார். அந்த மூட்டையையும் மறக்காமல் எடுத்துக் கொண்டார்கள்.

அன்று அமாவாசை இரவு. மாறு வேடமணிந்து வந்து கொண்டிருந் தவர்களைப் பார்த்த நாய்கள் கூட்ட மாக ஒன்று சேர்ந்துகொண்டு,



அவர்களைத் துரத்த ஆரம்பித்தன. செய்வதறியாது அரசரும் மற்றவர்களும் ஓட ஆரம்பித்தார்கள். அரசர் உடனே தன்னுடன் கொண்டு வந்த பையிலிருந்த கற்களை எடுத்து, சரமாரியாக வீசினார். அந்தக் கற்கள் நாய்க்கூட்டத்தின் மேல் விழ, மாய மாய் எங்கோ ஓடி மறைந்தன.

அப்பொழுதுதான் அரசர் மிகவும் மகிழ்ச்சியுடன் கூறினார். "அந்தப் பெரியவர், கற்களைக் கொடுக்கும்போது, எல்லாம் நன்மைக்கே என்று சொன்னாரே, அவர் சொன்ன வார்த்தை வேதவாக்காக பலித்து விட்டது" என்று பேரானந்தமடைந்தார்.

வழியில் அரச மரத்தடியில் அனைவரும் தூங்கிச் சற்றுக் களைப்பாறினார்கள். மெய்க்காப்பாளர்கள் தீவட்டியைக் கொளுத்தி வெளிச்சம் வரச் செய்தார்கள். எங்கும் பிரகாசமாய் ஒளி வீசியது.

அப்பொழுது மரத்திலிருந்து 'தொப்' பென்று ஒரு பெரிய பாம்பு அரசரிடம் விழுந்தது. அதைக் கண்ட அமைச்சர் "அரசே! ஆபத்து!" என்று கத்திக் கொண்டே தடியை எடுத்து அந்தப் பாம்பை அடித்துக் கொன்றார்.

இரண்டாவது ஆபத்திலிருந்தும் தப்பித்து விட்டோம் என்று அனைவரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

சரி, இனி அரண்மனைக்குப் போகலாம் என்று அவர்கள் அங்கிருந்து புறப்பட்டார்கள். போகும் வழியில் ஒரு பாழடைந்த மண்டபம் இருந்தது.


மண்டபத்துக்குள் மங்கிய விளக்கு வெளிச்சத்தில் இரண்டு உருவங்கள் உட்கார்ந்துகொண்டு மெதுவாகப் பேசிக் கொண்டிருந்தன.

"வல்லபா! நம் மன்னர் நமக்கு இட்ட கட்டளையை இன்றே நிறைவேற்ற வேண்டும். இந்த இரத்தினபுரி அரசரை எப்படியாவது பொழுது புலர்வதற்குள் கொன்று விட வேண்டும். இன்னும் சிறிது நேரத்தில் நாம் நம் குதிரைகள் மூலம் அரண்மனைக்குப் போய் நம் காரியத்தைக் கச்சிதமாக முடித்து விடலாம்" என்று அந்த உருவம் கூறியது. அரசரும் அமைச்சரும் திடுக்கிட்டனர். அப்பொழுது அந்த இருளில் எதிரிகள் இருவரும் சப்தமில்லாமல் வெளியே வருவது தெரிந்தது.

உடனே அமைச்சர் கைவசமிருந்த வலையை எடுத்து விரித்து அவர்கள் மீது வீசினார். இருவரும் வசமாக அந்த வலையில் மாட்டிக் கொண்டார்கள்.


"இருவரையும் இழுத்துச் சென்று பாதாளச் சிறையில் அடையுங்கள்" என்று அரசர் உத்தரவிட்டார். மெய்க்காப்பாளர்கள் அவர்களை அரண்மனைக்கு இழுத்துச் சென்று சிறையில் அடைத்தார்கள்.

மூன்றாவது ஆபத்திலிருந்தும் தப்பியதால் அரசர் பெருமகிழ்ச்சியடைந்தார். அரண்மனைக்குச் சென்றதும் அந்த ஏழைப் புலவரை வரவழைத்து ஏராளமான பரிசுப் பொருட்களைக் கொடுத்து அவருக்கு அமைச்சர் பதவியையும் அளித்தார்.



ஜெருசலேசம் நகரில் உள்ள ஒலிவ மலையில் இயேசு கிறிஸ்து கூறிய உபதேசங்கள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு சலவைக்கற்களில் வடிக்கப்பட்டுள்ளது. இக் கல்வெட்டில் இந்திய மொழிகள் இரண்டே இரண்டுதான் இடம் பெற்றுள்ளன. ஒன்று தமிழ், மற்றொன்று சமஸ்கிருதம்.

- என். ஜரினாபானு, திருப்பட்டினம்



ஆஸ்திரேலியர்களின் அபார ஆட்டம்!

விளையாட்டு உலகம்

இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையே டெஸ்ட் போட்டிகள் நடந்து முடிந்து விட்டாலும் நினைத்துப் பார்க்க சில சுவாரசியமான விஷயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இந்த பார்டர் கவாஸ்கர் டிராபி 2001 ஆம் ஆண்டில் நடைபெற்ற போது கிளென் மெக்ராத் சுமாராக விளையாடினார். ஷேன் வார்ன் பந்தை லக்ஷ்மண் ரன்களுக்கு விரட்டி விரட்டி அவரை நிலை குலையச் செய்து விட்டார். கில்லெஸ்பி மட்டும்தான் ஆஸ்திரேலிய அணியைக் காப்பாற்றினார். பந்து வீச்சு மோசமாக இருந்தாலும் ஆஸ்திரேலியர்கள் இம்முறை நன்றாகவே விளையாடினர்.

மெக்ராத் முதல் போட்டியில் ராகுல் திராவிட்டை தன்னுடைய அற்புத பந்து வீச்சால் வீழ்த்தி ரசிகர்களை உற்சாகப்படுத்தினார். ஷேர்ன்வார்ன் இந்திய விக்கெட்டுகளுக்கு ஏற்றாற்போல் தன்னை மாற்றிக் கொண்டு நாக்பூரில் தனது முத்திரையைப் பதித்தார். இவர்களுக்கு கில்லெஸ்பியும் காஸ்பரோவிக்கும் துணையாகச் செயல்பட்டார்கள். ஆஸ்திரேலியாவின் மட்டை வீச்சாளர்களில் ஹெய்டனும் லாங்கரும் மோசமாக விளையாடினர். இந்த ஒரு குறையைத் தவிர வேறு குறை சொல்ல முடியாத அளவுக்கு ஆஸ்திரேலிய அணி திடமாக இருந்தது. கேப்டன் ஆடம் கில்கிறிஸ்ட் பெங்களூரில் மிகவும் நன்றாக விளையாடினார். டேனியல் மார்ட்டின் தொடர் நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.




• கில்கிறிஸ்ட்

இந்திய அணியைப் பொறுத்தவரை கடைசிப் போட்டியை ஜெயித்தது மிகப் பெரிய சாதனை தான்! ஷேவாக்கும் திராவிட்டும் சென்னை போட்டியில் நல்ல கூட்டணியாகச் செயல்பட்டார்கள். அதேபோல் கடைசிப் போட்டியில் லக்ஷ்மணும் டெண்டுல்கரும் நன்றாக விளையாடினர்.


இந்தத் தொடர் முழுவதும் கும்ளே, ஹர்பஜன் காட்டில்தான் விக்கெட் மழை!

ஜாகிர்கான் டெஸ்ட் தொடரின் இறுதியில் நன்றாகப் பந்து வீசினார். முரளி கார்த்திக்கு தான் ஒரு சிறந்த பந்து வீச்சாளர் என்பதை நிரூபிக்க இந்தத் தொடர் உதவியது.

ஷேன் வார்ன், கில்கிறிஸ்ட் போஸ்டர் உங்களுக்காக 40-41 ஆம் பக்கங்களில்...



• ஷேர்ன்வார்ன்



• கும்ளே



ண்ணத் தூரிகை
முடிவு

கிறிஸ்துமஸ் தாத்தா



முதல் பரிசு
சி. திருமகன், பதினோராம் வகுப்பு,
ஒய்.ஆர்.டி.வி. மே.நி.பள்ளி, சிவகாசி



மூன்றாம் பரிசு
கே.கே. சரவணக்குமார்,
பத்தாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
காரமடை



ஆறுதல் பரிசு
பி. மல்லிகார்ஜுன், எட்டாம் வகுப்பு,
செயின்ட் சேவியர் மெ. மே.நி.பள்ளி,
திருநெல்வேலி

நவம்பர் இதழில் 'கிறிஸ்துமஸ் தாத்தா' என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள் உங்கள் பார்வைக்கு...



இரண்டாம் பரிசு
டி. சினேகா,
எட்டாம் வகுப்பு,
செயின்ட் மேரீஸ் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி, கடலூர்



ஆறுதல் பரிசு
ஜே.ஜே. ஜெசுப்ரியா,
பத்தாம் வகுப்பு, புனே



தமிழ்நாட்டில் ஒரு ஸ்டெஃபி கிராஃப்!

வாகை சூட வயது தடையில்லை



விறு விறுப்பாக நடந்து கொண்டிருந்தது அந்த டென்னிஸ் போட்டி. ஏழு வயது வந்தனா தன் முழுத் திறமையையும் காட்டி ஆடிக் கொண்டிருந்தார். ஆனால் எதிரே நின்று ஆடிய சிறுமி அவரை விட, திறமைசாலியாக இருந்தார். முதல் சுற்றில் வந்தனாவுக்குத் தோல்வி. அடுத்த இரண்டு சுற்றில் வென்றால்தான் கோப்பை கிடைக்கும். இரண்டாவது சுற்று துவங்கியது. ஒரு வெறித்தனத்துடன் தன் ஆட்டத்தைத் தொடர்ந்தார் வந்தனா. அடுத்த இரண்டு சுற்றிலும் தொடர்ந்து



வெற்றி பெற்று கோப்பையைக் கைப்பற்றினார்.

"அந்தப் போட்டியை மறக்கவே முடியாது. என் தாத்தா மாருதி ராவ் அவர்கள் பெயரில் நடைபெற்ற போட்டி அது. அதில் தோல்வியுறுவது என்பது நினைத்துப் பார்க்க முடியாதது. எனக்கு நான்கு வயதாக இருக்கும்போதே டென்னிஸ் கோர்ட்டை அறிமுகப்படுத்தியவர் அவர்தான். அந்தப் போட்டிக்கு பிறகு பல போட்டிகள், பலவற்றில் தோல்வி. ஆனால் விடாமுயற்சியும் பயிற்சியும் 2001ம் ஆண்டு, 14 வயதுக்கு கீழ் நடந்த தேசியப் போட்டியில் என்னை வெற்றியின் உச்சத்துக்குக் கொண்டு சென்றது" என்கிறார் வந்தனா முரளி.

வந்தனாவின் தாத்தா மாருதிராவ் தமிழ்ப் படவுலகில் புகழ்பெற்ற ஒளிப்பதிவாளராக இருந்தவர். அவருக்குப் பிடித்த விளையாட்டு டென்னிஸ். பேத்தி வந்தனாவை உலகின் மிகச் சிறந்த டென்னிஸ் வீராங்கனையாக உருவாக்க வேண்டும் என்பது அவர் கனவு. அந்தக் கனவு மெய்பட இன்று கடுமையாக உழைக்கிறார் வந்தனா. அவருக்கு உற்ற துணையாக இருந்து வழிகாட்டுகிறார்கள் அப்பா முரளியும் அம்மா ஜெயந்தியும். வீட்டில் அலமாரி முழுக்க கோப்பைகள், பதக்கங்கள்.

ப்ளஸ் டூ படிக்கும் வந்தனா தினசரி ஆறு மணி நேரம் டென்னிஸ் கோர்ட்டில் வியர்வை சிந்த பிராக்டீஸ் செய்கிறார். இதற்கிடையில் பல மாநிலங்களில் நடக்கும் போட்டிகளிலும் பங்கு பெற்று பரிசுகளுடன் திரும்புகிறார். பதினெட்டு வயதுக்குட்பட்டவர்கள் கலந்து கொள்ளும்

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

அக்டோபர் இதழில் அறிவித்த போட்டியில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். சரியான விடை அளித்தவர்



களில் இருந்து 5 பேர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடை:

1. புடாபெஸ்ட்
2. ஹங்கேரியன்
3. மிஸ்கோல்க், டெப்ரகென்
4. ஃபோரின்ட்
5. ரூபிக் க்யூப்
6. போர்ச்சுகல்

பரிசு யாருக்கு?

1. விஸ்வகிருஷ்ணன், ஆறாம் வகுப்பு, சாம் பள்ளி, மதுரை

2. பா.மதுபாலா, ஆறாம் வகுப்பு, புனித மேரி ஆங்கிலப்பள்ளி, குத்தாலம், தஞ்சை மாவட்டம்

3. கோ.ஸ்ரீஆர்த்தி, பதினோராம் வகுப்பு, ஜெயேந்திரா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, திருச்சி

4. பி. திவ்யா, ஒன்பதாம் வகுப்பு, அ.உ.நி. பள்ளி, பேரங்கியூர், விழுப்புரம் மாவட்டம்

5. கே. கவிதா, நான்காம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ணா வித்யாலயா, ஆற்காடு, வேலூரர் மாவட்டம்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

போட்டிகளிலும் கலந்து கொண்டு தனது ஸீனியர்களைக் கலங்க அடிக்கிறார். டென்னிஸ் வந்தனாவின் நேரத்தில் பெரும் பகுதியை எடுத்துக் கொள்வதால் அட்டெண்டன்ஸ் வற்புறுத்தாத தேசிய திறந்தவெளி பள்ளியில் படிப்பைத் தொடர்கிறார். இவரது ஆட்டத்தை பார்க்கும் ரசிகர்கள் 'இதோ உருவாகிறார் ஒரு ஸ்டெஃபிகாரப்' என்று பாராட்டு கிறார்கள்.

டென்னிஸ் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற முதல் தகுதி உடலை ஃபிட்டாக வைத்துக் கொள்ள வேண்டும். அதற்காக தனிசரி ஒரு மணி நேரம் உடற்பயிற்சிகள் செய்கிறார் இவர். டென்னிஸ் ஆட்டக்காரருக்கு ஊகிக்கும் திறனும் கவனமும் தேவை. இதற்காக யோகா பயிற்சியிலும் ஈடுபடுகிறார். கோர்ட்டில் கால்களுக்கும் கைகளுக்கும்தான் முக்கிய வேலை. எனவே கால்பந்து, பேஸ்கட்பால் என்று வேறு ஆட்டங்களையும் ஒரு உடற் பயிற்சியாக எண்ணி தினசரி ஆடுகிறார். ஆட்டத்தின் மேலுள்ள ஆர்வம் காரணமாக, அமெரிக்காவில் உள்ள ஃபுளோரிடாவில் உலக டென்னிஸ் அகதமியிலும் பயிற்சி எடுத்துக் கொண்டு வந்துள்ளார்.

''எனக்குப் புடித்த டென்னிஸ் வீராங்கனை ஸ்டெஃபிதான். வெற்றி பெற வேண்டும் என்று உறுதியுடன் அவர் ஆடும் ஆட்டம் மிகவும் பிடிக்கும். அவரது யுக்திகள், ஆடும் ஸ்டைல் ஆகியவை என்னை மிகவும் கவர்ந்தவை. அவரது ஆட்டத்தை சி.டி.யில் போட்டுப் பார்த்துக் கொண்டே இருப்பேன் என்கிறார் வந்தனா. சமீபத்தில் பூனாவில் நடந்த பெண்கள் போட்டியில், ஸீனியர்களுடன் மோதினார் வந்தனா. தோல்வியுற்றாலும் அசத்துகிறாளே இந்தச் சிறுமி என்று ஆச்சர்யப்பட்டார்கள் சக வீரர்கள். நேரம் கிடைத்தால் கையில் காமிராவுடன் கிளம்பி விடுகிறார்.

''அடுத்த வருடம் சாம்பியனாக வருவேன். என்னுடைய ஆசை இந்தியாவுக்கு கிராண்ட் ஸ்லாம் பெற்றுத் தர வேண்டும். விம்பிள்டன், ஃபிரெஞ்ச் ஓபன், யு.எஸ்.ஓபன், ஆஸ்திரேலிய ஓபன் ஆகிய போட்டிகளில் ஏதாவது ஒன்றில் வெற்றி பெற்றால் கிராண்ட் ஸ்லாம் தருவார்கள். அதைப் பெறும்நாள் வெகு தொலைவில் இல்லை'' என்று உறுதியுடன் சொல்கிறார் மலேஷிய போட்டிகளில் கலந்து கொள்ள கிளம்புவதில் பிஸியாக இருந்த வந்தனா.

- ப்ரியன்


படங்கள்: **ராஜன்**

10 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





1. மணி, 2. தாத்தாவின் தொப்பி, 3. மூட்டையில் உள்ள நட்சத்திரம்,
4. பெண்ணின் ரிப்பன், 5. நாயின் மூக்கு, 6. பையனின் கை விரல்,
7. தாத்தாவின் பெல்ட், 8. கவுன், 9. குழந்தையின் பனியன், 10. பையனின் ஷூ



வண்ணம் தீட்டுங்கள்!

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05* Registered as a Newspaper in Srilanka

SEMAS

ISO-9001:2000 Certified

Academy of Excellence

Ready to FLY TAIWAN!

These students are selected to take part in the International Competition on Dec.25th 2004 at Taiwan

Organizing by Taiwan Chamber of Commerce



S. Shrinithi
3rd Std.
Srimathi Sundaravalli Memorial School
Chrompet, Chennai



P. Sibikar
4th Std.
Holycross Primary Matriculation School
Salem



L. Venkatesh Prabu
10th Std.
Holycross Higher Secondary School
Salem



L. Indira Priya
7th Std.
St. Joseph Mat. Higher Secondary School
Salem



S. Janamithra
6th Std.
Bethel Public Mat. Higher Sec. School, Namakkal



Y. Divaakar
7th Std.
Bharathi Higher Sec. School,
Namakkal



A. Akshaya Keerthi
1st Std.
St. Joseph Mat. Higher Secondary School
Salem

SEMAS Unique in Abacus Education. How?

Advanced and Entire concept of Abacus education and its Brain development Techniques as it is in Japan!
Unique syllabus for all age groups from 3 years old onwards!
Unique syllabus to teach all the Arithmetic sums with in 3-months of practice!
Highly structured syllabus, even Master Level finished students from other institutions also can Join to continue further!!

SEMAS solicits GLOBAL franchisee

Corporate Office SEMAS Pvt. Ltd.
545, 14th Street, 4th Sector, K.K. Nagar, Chennai - 600 078.
Ph.: 24722550, 24722505, Fax : 24801083
www.semasindia.com Email : info@semasindia.com